DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

HomeLife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1511
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday March 21, 2025

# கனடாவின் நீதி அமைச்சராகப் பதவியேற்ற ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு இலங்கைப் பாராளுமன்றத்தில் வெளிநாட்டு அமைச்சர் புகழாரம்





கடந்த வாரம் கனடாவின் புதிய பிரதமராகப் பதவியேற்ற மார்க் கார்னி அவர்கள் நியமித்த சிறிய அமைச்சரவையில் கடந்த அமைச்சரவையில் பழங்குடியினர் விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சராகப் பதவி வகித்த ஹரி ஆனந்தசங்கரி அவர் மேற்படி அமைச்சுப் பொறுப்புக்களோடு நாட்டின் முக்கிய அமைச்சுகளின் ஒன்றான நீதி அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.


இவரது புதிய அமைச்சர் நியமனம் தொடர்பாக உலகெங்கும் வாழும் அனைத்து தமிழ் மக்களும் ஆச்சரியம் மேலிட்டவர்களாக பாராட்டுக்களை தெரிவித்த வண்ணம் இருக்க. இலங்கைப் பாராளுமன்றத்திலும் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அவர்கள் தமது அரசாங்கத்தின் சார்பிலும் இலங்கை மக்கள் சார்பிலும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் இலங்கையில் பிறந்தவர் என்பதற்கு அப்பால் இந்த பாராளுமன்றத்தில் பல ஆண்டுகள் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து இலங்கையின் தேசிய ஒற்றுமைக்காகக் குரல் கொடுத்த வீ. ஆனந்தசங்கரி அவர்களது புதல்வர் என்பதையும் நாம் அறிந்து மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம் என்றார்.

ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் உறுப்பினராக தொடர்ந்து மூன்று தடவைகள் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் ஒரு சட்டத்தரணி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடாவில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்களிடம் காணப்படும் முரண் பாடுகளை தீர்ப்பதற்காக முன்னின்று செயற்படுபவராக ஹரி ஆனந்தசங்கரி தனது இளமைக் காலங்களில் திகழ்ந்துள்ளார். அத்தோடு, கனடா தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளிலும் அவர் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது,

இந்நிலையில், புதிதாக அமையப் பெற்ற கனடா அரசின் புதிய அமைச் சரவையில், ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் நீதி அமைச்சராகவும் அறிவிக்கப்பெற்று கனடாவின் ஆளுனர் நாயகம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார்.

# கனடாவின் மத்திய பாராளுமன்றத்திற்காக தேர்தல் ஏப்ரல் 28 அன்று அல்லது மே 5 அன்று நடத்தப்படுமா?



## பாராளுமன்றக் கலைப்பு தொடர்பாக எதிர்வரும் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மார்க் கார்னி அறிவிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

கனடாவின் மத்திய பாராளுமன்றத்திற்காக தேர்தல் ஏப்ரல் 28 அன்று அ ல்லது மே 5 அன்று நடத்தப்படும் என்று கனடாவின் தேசிய ஊடகங்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது தான் பிரதமராக உள்ள கனடியப் பாராளுமன்றக் கலைப்பு தொடர்பாக எதிர்வரும் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒட்டாவாவில் பிரதமர் மார்க் கார்னி அறிவிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடாவின் கடைசியாகப் பிரதமராகப் பதவி வகித்த ஜஸ்டிதன் ட்ரூடோவின் பதவி விலகலைத் தொடர்ந்து சில நாட்களே பிரதமராகப் பதவி வகித்த மார்க் கார்னி அவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அவர் கனடாவின் ஆளுனர் நாயகம் மேரி சைமன் அவர்களோடு கலந்தாலோசித்த பின்னர் கனடாவின் 44 வது பாராளுமன்றத்தை கலைத்து, அதன் 45 வது பாராளுமன்றத்திற்காக தேசிய ரீதியிலான பிரச்சாரங்களை ஆரம்பிக்கலாம் என பத்திரங்களில் கையெழுத்திடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடிய தேர்தல் சட்டப்படி, ஒரு தேர்தலுக்கான குறுகிய கால அளவு 36 நாட்கள் ஆகும், அதாவது பாராளுமன்றம் கலைக்கப்படுகின்ற நாளிலிருந்து அடுத்த அரசாங்கம் ஏப்ரல் 28 அன்று அல்லது மே 5 அன்று தெரிவு செய்யப்படலாம் எனவும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்படும்.

சில நாட்களுக்கு முன்னர் செய்தியாளர் மார்க் கார்னி அவர்களிடம் இந்த வார இறுதியில் அவர் ஒரு தேர்தல் ஒன்றை அறிவிப்பாரா என்று கேட்டதற்கு, அவர். இது ஒரு “நியாயமான கேள்வி” என்று கூறினார், அத்துடன் மார்க் கார்னி தொடர்ந்து தெரிவிக்கையில் ”இந்த நெருக்கடியான நேரத்தில் ... அரசாங்கத்திற்கு வலுவானதும் தெளிவானதும் ஆணை தேவை.” என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

# உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN உதயன்

விருது

UTHAYAN AWARD

Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025

**Time:** 6:00 PM

**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

## This Year's Awards Are:

## இவ்வருடத்திற்குரிய விருதுகள்

Uthayan Literary and Artistic Exuberance Award
Uthayan Inter-Communal Relationship Award
Uthayan Business Entrepreneur Award - Ontario
Uthayan Business Entrepreneur Award - Quebec
Uthayan Leadership Award
Uthayan Youth Icon Award
Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கனடிய மக்களின் "ஆணை"யைப் பெறுவதற்காக தேர்தலை நடத்துகின்றாராம் மார்க் கார்னி!

கழிந்துபோன கடந்த சில வாரங்கள். கனடாவில், அரசியல், தேர்தல் மற்றும் அமெரிக்காவின் வரிவிதிப்பு தொடர்பாக ட்ரம்ப் அவர்களின் அச்சுறுத்தல் போன்றவை கனடாவில் தேசிய அளவில் மக்களிடையே மிகுந்த பதற்றத்தையும் அத்துடன். தங்களது அவசியமான விடயங்களுக்கு அல்லது பணிகளுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் இழந்து நின்ற காலப்பகுதியான கடந்த சென்றது.

"ஒன்றாரியோ மாகாணத்திற்கு தற்போது ஒரு முந்தியதான தேர்தல் தேவையில்லை" என்று என்டிபி கட்சி அழுத்தமாகத் தெரிவித்திருந்த நிலையில் அந்த தேர்தலும் நடத்தப்பெற்றது. ஆனால் ஒன்றாரியோ தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டமை, உடனடியாக அவர் கனடா மீதான பொருளா-தாரத் தாக்கங்களை ஏற்படுத்தப்போவதாக விடுத்த கடுமையான அறிவிப்புக்கள், அதற்கிடையில் லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பு. என அரசியல் சார்ந்த விடயங்களின் கனடிய தேசமும் கனடியர்களும் மூழ்கிப்போய் இருத்தல் அவசியமாக இருந்தது.

நாம் மேற்சொன்ன விடயங்கள் அனைத்தும் முடிவு காணப்படாத விடயங்களாகவே தெரிந்த வண்ணம் இருக்கையில் கனடாவின் மத்திய பாராளுமன்றத்திற்கான தேர்தல் அறிவிப்பு வெளியாகலாம் என்ற செய்திகள் கசிந்துள்ளன. ஆளும் கட்சியான லிபரலின் புதிய தலைவரும் பிரதமருமான மார்க் கார்னி அவர்கள் தான் பதவியேற்ற சில நாட்களுக்குள்ளேயே சில முக்கியமான அறிவிப்புக்களை விடுத்துள்ளார். அவற்றில் பல நிதி ஒதுக்கீடுகள் தொடர்பானவை என எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்யத் தொடங்கியிருந்தன.

ஆனால். தேர்தலுக்குத் தயாராகுங்கள் என்ற அறிவிப்பு ஞாயிற்றுக்கிழமை வெளியாகலாம் என்ற காத்திருப்புக்கு இடையில் மக்கள் மத்தியிலிருந்து பல கேள்விகள் எழுந்த வண்ணம் உள்ளன. அதுவும் கனடாவில் மிகப் பெரிய மாகாணம் என்று அழைக்கப்பெறும் ஒன்றாரியோவிற்கான தேர்தல் நடத்தப்பெற்ற ஓரிரு மாதங்களுக்குள்ளேயே நாம் "எமது தலைமைப் பிய்த்துக் கொண்டு" ஒரு ஆளும் கட்சியையும் அதன் பிரதமரையும் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளதே? யாரைத்தான் நம்புவது முன்னைய காலங்களைப் போன்று திறமையான வேட்பாளர்களை காணமுடியவில்லையே? நாம் யாருக்கு வாக்களிப்பது என்றெல்லாம் வினாக்களாக எழுந்து நிற்கின்ற இந்த காலப்பகுதியில் கனடாவின் நிதி நிலைமை மோசமானதாக உள்ளது என்ற அறிவிப்புக்களும் வந்த வண்ணம் உள்ளன.

இவ்வாறான நிலையில், அமெரிக்காவை சமாளிக்க வேண்டிய நேரத்தில் மற்றுமொரு தேர்தலை நடத்தும் அவசியம் எப்படி வந்தது என கனடியர்கள் அனைவரும் "முனகிக்" கொண்டிருப்பதாகவும் தேசிய ஆங்கில ஊடகங்களின் பத்தி எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டும் தொலைக்காட்சிகளில் பேசிக் கொண்டே இருக்கின்றார்கள்.

மார்க் கார்னியின் அழைப்புக்களும் அறிவிப்புக்களும் என்ன சொல்லப்போகின்றன என்பதை இன்னும் சில நாட்களில் தெரிந்து விடும்!

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728



Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?

Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?



Not to Worry!

Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

மன்னாரில் காணி விற்பனைக்கு உண்டு

மன்னார் சின்னக் கடையில் 20 பேர்ச் வீட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.
அதில் 5 கடைகள் கட்டுவதற்கான அனுமதி பெறப்பட்டு.
அதற்கான வரைபடமும் உள்ளது. காணியைச் சுற்றி நான்கு பக்கமும் மதில் கட்டப்பட்டு கேற்றும் போடப்பட்டுள்ளது. காணிக்கு அருகாமையில் பிரதான வீதியும் ஆஸ்பத்திரியும் பெண்கள் கொன்வென்ட் பாடசாலையும் ஆண்கள் பாடசாலையும் கோயிலும் உள்ளன.

தொடர்புகளுக்கு ஜேறாட் என்பவரை
(416) 822-7358 என்ற இலக்கத்தில் அழைக்கவும்

Trinity Thaiyal
Tailoring and Alteration Services
Mary James: (647) 467-1410
Located: Neilson and Sheppard
நாம் வழங்கும் தையல் சேவைகள்:
சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை,
ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள் வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக் கூடிய வகையில் Pleating செய்தல்
Instagram: @trinitythaiyal

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கனடிய – இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள "கனடிய கல்வி கண்காட்சி மற்றும் யாழ்ப்பாண முதலீட்டு வர்த்தக மாநாடு"

பு. கஜிந்தன்




கனேடிய - இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாட்டில் - வடக்கில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது.

வடக்கு பிராந்தியத்தில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு பயனுள்ள பாதையை உருவாக்கும் நோக்கில் கனேடிய - இலங்கை வர்த்தக சம்மேளனம் யாழ்ப்பாணத்தில் கனேடிய கல்வி கண்காட்சி மற்றும் யாழ்ப்பாண முதலீட்டு வர்த்தக மாநாடு ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக அதன் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து யாழ். ஊடக அமையத்தில் 16ம் திகதி அன்று ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்த கனேடிய - இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் சிரேஸ்ட முகாமையாளர் முகமட் ஹமீட் இவ்வாறு கூறியதுடன் அது குறித்து மேலும் கூறுகையில், யாழ். குடாநாட்டு இளைஞர் யுவதிகளின் கல்வி மற்றும் தொழில்துறை குறித்த எதிர்கால கனவுகளை நனவாக்கிக் கொடுக்கும் வகையில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. அதனடிப்படையில் குறித்த மாநாடு மே 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

குறித்த மாநாட்டில் முதலாம் நாளன்று கனடா மற்றும் பிற சந்தைகளுக்கு இலங்கை மாணவர்களை பணிக்கமர்த்தல், இலங்கையில் கனேடிய கல்வியை வழங்கல், தொழில் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டை நிறுவுதல், கனடா கல்வி மற்றும் திதன் பயிற்சி உரிமையாளர்களை ஊக்குவித்தல், திறன் இடப்பெயர்வு மத்தும் வேலை வாய்ப்புக்கான பயிற்சி மற்றும் திறன்களை மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி நடைபெறவுள்ளது.

அதேநேரம் யாழ் வேலைவாய்ப்பு வாய்ப்பு மற்றும் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் என்ற தலைப்பில் இரண்டாம் நாள் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் யாழ் வேலை வாய்ப்பும் தொழிலாளர்களுக்கான சாதக நிலைகளை உருவாக்கல்.

இளைஞர்களுக்கு வேலவாய்ப்பு வழங்கல், பல நூறு படித்த பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கல் மற்றும் வர்த்தகம் தொடர்பான மாநாடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் விவசாயம் மற்றும் மீன்வளர்ப்பு, சிறு தொழில் முயற்சியாளர்களுக்கானஎதிர்கால திட்டங்கள் முதலீடுகளை உருவாக்குவது தொடர்பான பயிற்சிகளும் இதன்போது இடம்பெறவுள்ளது.

குறிப்பாக காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பகுதிக்கு உருவாக்கப்பட இருக்கும் முதலீட்டு வலயங்களில் இத்தகைய வாய்ப்புக்களை அரச மற்றும் தனியார் இணைந்த கட்டமைப்பில் உருவாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எமது இந்த நிகழ்வுக்கு இலங்கையின் பிரதமர் பிரதம அதிதியாக கலந்துகொள்ள இருக்கின்றார்.

வலம்புரி விருந்தினர் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வினூடாக கனடாவிலிருந்து முதலீடுகளை குறிப்பாக வடபகுதிக்கு கொண்டுவர முயற்சிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

அதுமட்டுமல்லாது இலங்கையிலிருந்து சென்று வெளினஷநாடுகளில் கற்று மீளவும் வரும் மாணவர்களுக்கு தகுதிக்கேற்ப வேலைகளும் ஊக்குவிப்பு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

அந்தவகையில் இந்த வாய்ப்பை வடக்கின் இளைஞர் யுவதிகள் சரியாக பயன்படுத்தி வாழ்வை வெற்றிகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போராட்டத்தில் குதித்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதியர் சங்கம்!



நாடளாவிய ரீதியில் தாதியர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், யாழ். போதனா வைத்தியசாலை தாதியர்களும் 17ம் திகதி திங்கட்கிழமை அன்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பாதீட்டில் தாதியர்களுக்கு ஏற்பட்டுள்ள சம்பளப் பிரச்சினையை தீர்க்ககோரி இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டமானது அன்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரை இடம்பெற்றுள்ள நிலையில், முற்பகல் 11:30 மணி முதல் 12.30 மணி வரையான காலப் பகுதியில் தாதியர்கள் கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இது குறித்து யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் சங்கத் தலைவர் தர்மகுலசிங்கம் பாலுமகேந்திரா கருத்து தெரிவிக்கையில்,

கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி தாதியர்கள் நாடளாவிய ரீதியில் ஒரு மணித்தியால அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், சுகாதார அமைச்சு பாதீட்டில் ஏற்பட்டுள்ள சம்பளப் பிரச்சினைக்கு தீர்வை வழங்காமையால் மார்ச் மாதம் 6ஆம் திகதி பணி புறக்கணிப்பு செய்வதற்கு அரச தாதியர் சங்கம் தீர்மானித்திருந்தது.

இருப்பினும் மார்ச் 5ஆம் திகதி அரச தாதியர் சங்கத்துடன் சுகாதார அமைச்சு ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டது. இதன்போது, நிதி அமைச்சுடன் கலந்துரையாடி தீர்வு வழங்குவதாக தெரிவித்து கால அவகாசம் கோரப்பட்டது. இந்நிலையில் வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைந்த நிலையில் தீர்வு வழங்கப்படவில்லை. ஆகையால் இன்றையதினம் மீண்டும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்றார்.



# யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம்!

18ம் திகதி செவ்வாய்கிழமை அன்றையதினம் காலை 8.10 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்ற மற்றையவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக, தெல்லிப்பழையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற ஒரு மோட்டார் சைக்கிள் மீது அதே திசையில் சென்ற இன்னொரு மோட்டார் சைக்கிள் மோதியது.

இந்த விபத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ள நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கனடாவிலிருந்து யாழ்ப்பாணம் சென்றவர்கள் பயணித்த கார் விபத்துக்குள்ளானது!



17ம் திகதி திங்கட்கிழமையன்று யாழ்ப்பாணம் - நாவற்குழி மாதா கோவிலடியில் ஒரு கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த கார், வீதியோரத்தில் உள்ள மாதா கோவிலின் மதலுடன் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இருப்பினும் இந்த விபத்தின்போது வாகனத்தில் பயணம் செய்த மூவருக்கும் எந்தவிதமான காயங்களும் ஏற்படவில்லை.

கனடாவிலிருந்து சென்றிருந்த குடும்பம் ஒன்றின் பெண் ஒருவர், அவரது கணவர் மற்றும் 5வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை ஆகியோர் பயணித்த காரே இவ்வாறு விபத்தில் சிக்கியது. சாரதிக்கு போதிய நித்திரை இன்மையே விபத்துக்கான காரணம் என அறியமுடிகிறது.

# வவுனியா பேருந்து நிலைய இருக்கைகளில் அமர்வோருக்கு காயங்கள் ஏற்படுகின்றன!




வவுனியா மத்திய பேருந்து நிலைய இருக்கைகளில் அமர்வோருக்கு உடலில் காயங்கள் ஏற்படுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் காணப்படும் இருக்கைகள் உடைந்து, பழுதடைந்து காணப்படுவதால் பயணிகள் எழுந்து நிற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

நீண்ட நேரம் எழுந்து நிற்க முடியாதவர்கள் குறித்த இருக்கையில் அமரும் போது உடலில் காயங்கள் ஏற்படுவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.



இது பற்றி நகரசபையோ அன்றி இலங்கைப் போக்குவரத்துச் சபையோ அக்கறை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வினயமாகக் கேட்கின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிய முதல்நாளில் மாணவ, மாணவிகளிடம் மர்மநபர்கள் அத்துமீறல்!

யாழ்ப்பாணத்தில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டுத் திரும்பிய மாணவ, மாணவிகளிடம் உயர்தர வகுப்புகளுக்கான விளம்பரக் கையேடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மர்ம நபர்கள் 17ம் திங்கட்கிழமையன்று பலவந்தமாகத் திணித்துள்ளனர்.

வன்முறைக் குழுக்களில் உள்ளவர்களைப் போன்ற தோற்றத்தில் இருந்த அவர்கள், மாணவிகளுக்கு நெருக்கமாகவும், அவர்களின் கைகளைப் பிடித்து இழுப்பது போன்றும் நடந்துகொண்டமை அங்கிருந்தவர்களை முகம் சுழிக்க வைத் துள்ளது.

இந்த அத்துமீறலில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் பிரதேச செயலகங்களுக்கு பெற்றோராலும், சமூக நலன்விரும்பிகளாலும் முறைப்பாடுகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவம் இடம்பெற்ற பகுதிகளுக்கு, பிரதேச செயலகங்களின் உரிய அதிகாரிகள் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், மாணவ மாணவிகள் பாதுகாப்பாக வீடு திரும்புவதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

# பெண் வைத்தியர் வன்புணர்வு பெண்கள் தின மாதத்தின் கரிநாளாகியது

இலங்கை செய்திகள்
Sri Lanka News



## மன்னார் பெண்கள் வலையமைப்பு பிரதமருக்கு கடிதம்

பு. கஜிந்தன்

அநுராதபுரத்தில் கடந்த மார்ச் 10ம் திகதி பெண் வைத்தியருக்கு நடைபெற்ற பாலியல் வன்கொடுமையைக் கண்டித்தும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் மன்னார் பெண்கள் வலை அமைப்பு கூட்டாக இலங்கை பிரதமருக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பி உள்ளது.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது, மதிப்பிற்குரிய இலங்கை வாழ் குடிமக்களுக்கும், ஊடகத்துறையில் கூடியிருக்கும் பெண்கள். ஆண்களுக்கும் மற்றும் பிரதமர் அவர்களுக்கும்,

இன்று நாங்கள் அனைவரும் துயரமான இதயங்களுடன் உங்கள் முன், இலங்கை முழுவதையும் உலுக்கிய சம்பவம் தொடர்பாக எடுத்துரைப்பதற்கு ஒன்றுகூடியுள்ளோம். அநுராதபுரத்தில் பணியாற்றும் பெண்வைத்தியருக்கு, இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவச்சிப்பாயால் கத்தி முனையில் இழைக்கப்பட்ட உடல்ரீதியான வன்புணர்வு என்பது, ஒரு தனிமனிதன் மீதான வன்முறையல்ல, மாறாக இது இலங்கையில் வாழுகின்ற ஒட்டு மொத்தப்பெண்களின் கண்ணியம், பாதுகாப்பு, நம்பிக்கை மீது இழைக்கப்பட்ட குற்றச்செயலாகும்.

இந்தக்கொடுரமான வன்செயல் பெண்கள் நலிந்த நிலையில் உள்ளார்கள் என்பதை எழுத்துரைக்கின்றது.

அத்துடன் இது சாதாரண பெண்களுக்கு மட்டுமல்ல, தங்களது வாழ்க்கையை ஏனையவர்களின் உயிர்களைக்காப்பாற்ற தங்களை அர்ப்பணித்த வைத்தியமாது மீதும் நடந்தேறியுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

மதிப்பிற்குரிய பிரதமர் அவர்களே பெண்களாகிய நாங்கள் வலிமையான மற்றும் உடனடியான மேன்முறையீட்டை தங்களுக்கு முன்வைக்கின்றோம். இந்தப் பாரதூரமான குற்றச்செயலைப் புரிந்த கொடும்பாவி சட்டத்தின்கீழ் மிகவும் கொடூரமான முறையிலும், தண்டிக்கப்படவேண்டும். இந்தச்சம்பவத்திற்கான நீதி உடனடியாகவும். கடுமையாகவும் எவ்வித காலதாமதமின்றியும், எதுவித இணக்கப்பாடுகளுமின்றியும் வழங்கப்படவேண்டும். இது ஒரு சம்பவம் தொடர்பானதல்ல.

மாறாக இதன் முலம் ஒரு தெளிவான கருத்து முன்வைக்கப்படவேண்டும். அதாவது இலங்கையில் இவ்விதமான பாரதூரமான செயல்கள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் எவ்விதத்திலும் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது என்பதாகும்.

பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் நீதி முதன்மைப்படுத்தப்படவேண்டும். சட்டநடைமுறைகள் மீள் ஒழுங்குபடுத்தப்படவேண்டும். இதில் ஆறாத்துயரமாக அமைவது மார்ச்மாதம் உலகளாவிய ரீதியில் அனைத்துப் பெண்களையும் மேன்மைப்படுத்தவும் பாராட்டவும் அவர்களது சேவைகளுக்காக நன்றியைச் செலுத்தவும் என்பதுடன், மார்ச் மாதம் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினமாக அனுஸ்டிக்கப்பட்டும் வருகின்றது.

சர்வதேச மகளிர்தினம் கொண்டாடப்பட்டு இருதினங்கள் கடந்த நிலையில் இந்த நெஞ்சை உலுக்கும் சம்பவம் நடைபெற்றது மிகுந்த வேதனையளிக்கின்றது. மேலும் இந்நிகழ்வு மார்ச் மாதத்தின் கொண்டாட்டங்களில் ஒரு காரிருளைப் படரச்செய்துள்ளது.

நாடளாவியரீதியில் பெண்களின் மனதில் கடும்கோபத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் சொல்லப்போனால் பெண்கள் மார்ச் மாதத்தில் மட்டுமல்ல மாறாக அவர்களது வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் மதிக்கப்படவும் கொண்டாடப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டியவர்கள். இந்த துயரகரமான சம்பவம். பெண்களாகிய நாங்கள், சமஉரிமைக்காகவும் நீதிக்காகவும் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேணடியள்ளதென்பதை உணர்த்துகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயம், இந்தச் குற்றச்செயலில் ஈடுபட்டநபர் இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமகாலங்களில் நடைபெறுகின்ற குற்றச்செயல்களை உற்று நோக்குகின்றபோது காணக்கூடியது யாதெனில் இவ்வாறாக இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர்கள் சமுகங்களில் இழைக்கப்படுகின்ற குற்றச்செயல்களில் பெரும்பங்கினை வகிக்கின்றனர். இந்த இழிவான செயல்கள் ஆயுதம் தாங்கி பாதுகாப்பில் ஈடுபடுகின்றவர்களின் பொறுப்புடைமையையும் ஒழுக்கத்தையும் கேள்விக்குறியாக்குகின்றது. இந்நிலையில் அப்பாதுகாப்புத்துறையில் பணிபுரியும் தனிநபர்கள் இவ்வாறான கொடூரமான குற்றச்செயல்களில் ஈடுபடும்போது இலங்கையில் வாழ்கின்ற மக்கள் எவ்வாறு பாதுகாப்புத்துறையின் மீது நம்பிக்கை கொள்ளமுடியும்?

இலங்கை அரசாங்கம் இந்தத்தப்பியோடிய இராணுத்தினர் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குற்றச்செயல்கள் நடைபெறுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம் என குறித்த அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

# தவறான முடிவெடுத்து 6 மாத கர்ப்பிணியான இளம் குடும்பப் பெண் உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் தவறான முடிவெடுத்து இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிர் மாய்த்துள்ளார். இதன்போது வசாவிளான் தெற்கு பகுதியைச் சேர்ந்த பிரகாஸ் பிருந்தா (வயது 26) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் ஆறு மாதங்கள் கர்ப்பிணியாக காணப்படுகின்றார். கணவனுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி தனக்கு தானே தீ வைத்துள்ளார்.

இந்நிலையில் அயலவர்கள் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் மார்ச் 15ம் திகதி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உலக நாடுகளில் உள்ள தமிழ்ச் சுவடிகள் மின் பதிப்பாக்கம் செய்யப்பெற வேண்டும் என்கிறார் பழ. நெடுமாறன்

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழக அரசின் 2025-2026 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அறிவித்திருக்கிறார். மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களையும் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளையும் அறிவித்திருப்பதை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் வரலாற்றின் தொன்மையை உலகறியச் செய்யும் திட்டங்கள், ஐ.நா. பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 193 உலக நாடுகளின் அலுவல் மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்ப்புத் திட்டம், 500 தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடும் திட்டம், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர் தொழில்நுட்ப நூல்களைத் தமிழ்மொழியில் வெளியிடும் திட்டம், தமிழ்நாடெங்கும் அரசு நடத்தும் புத்தகக் கண்காட்சிகளை இந்தியாவின் பிற மாநில முக்கிய நகரங்களிலும், வெளிநாடுகளிலும் நடத்தும் திட்டம், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் இளைய தலைமுறையினருக்குத் தமிழ் மரபு, தமிழ்மொழி மற்றும் தமிழ்க் கலைகள் ஆகியவற்றைப் பயிற்றுவிக்க 100 தமிழாசிரியர்கள் மற்றும் கலைஞர்களை அந்நாடுகளுக்கு அனுப்பி நேரடியாக வகுப்புகள் நடத்திடும் திட்டம், தமிழ்ச் செம்மொழியின் பெருமையினையும், தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினையும் உலகத் தமிழ் இளைஞர்களிடையே பரப்பிட செய்யும் நோக்கத்தில் அவர்களுக்குக் கணினி வழி தேர்வு முறையில் உலகத் தமிழ்ப் போட்டி திட்டம், தமிழ்மொழியின் தொன்மையினை இளைய தலைமுறையினருக்கு உணர்த்தும் வகையில் அகரம் மொழிகளின் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம், தமிழ்நாட்டில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளை விரிவாக பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளும் திட்டம், அகழ்வாராய்ச்சியில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் பொருட்களை ஆய்வதற்கு உலகப்புகழ் பெற்ற ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் திட்டம், காவிரிபூம்பட்டினம் முதல் நாகப்பட்டினம் வரை ஆழ்கடல் அகழாய்வினை மேற்கொள்ளும் திட்டம், தமிழ்நாடெங்கும் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகளில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் பொருட்களைக் காட்சிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகங்களை அமைக்கும் திட்டம், சிந்துவெளி பண்பாட்டுக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டின் நிறைவையொட்டி சென்னை அருங்காட்சியகத்தில் சிந்துவெளிப் பண்பாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம், சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள 2000த்திற்கும் மேற்பட்ட செப்புச் சிலைகளை அனைவரும் கண்டு மகிழும் வகையில் காட்சிப்படுத்த புதிய கட்டடம் ஆகியவற்றை உருவாக்கும் திட்டங்களைத் தமிழக அரசு மேற்கொள்வதை உளமாறப் பாராட்ட தமிழர்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளனர்.



பழந்தமிழ் ஓலைச்சுவடிகள், அரிய ஆவணங்கள் ஆகியவற்றை மின் பதிப்பாக்கம் செய்திடும் திட்டத்தை நிதியமைச்சர் அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். தமிழ்நாட்டில் உள்ள பழந்தமிழ் ஓலைச்சுவடிகள் அரிய ஆவணங்களை மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் அமைக்கப்பட்டுள்ள அரசு அருங்காட்சியகங்களிலும், அந்நாடுகளின் தேசிய நூலகங்களிலும் பல்லாயிரக்கணக்கான பழம் ஓலைச்சுவடிகள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள், கிருத்தவ பாதிரிகள் ஆகியோர் இங்கிருந்து கொண்டு சென்ற பழம் ஓலைச்சுவடிகளும், ஆவணங்களும் இந்நாடுகளில் உள்ள தனியார் அருங்காட்சியகங்களிலும் ஏராளமாக உள்ளன. இவற்றின் காலம் 300 அல்லது 400 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்காது. எனவே, இவற்றையெல்லாம் உடனடியாக மின் பதிப்பாக்கம் செய்து தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து சேமித்து வைக்கவேண்டும். தமிழக ஆய்வாளர்கள் இவற்றை ஆய்வு செய்வதற்கு உதவ வேண்டும். இதன்மூலம் இதுவரை கிடைக்காத பழந்தமிழ் நூல்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்பு உருவாகும். எனவே, பழந்தமிழ் சுவடிகள், ஆவணங்கள் ஆகியவற்றை மின் பதிப்பாக்கம் செய்யும் திட்டத்தை உலக நாடுகளுக்கும் விரிவாக்க வேண்டும் என நிதியமைச்சரையும் முதலமைச்சர் அவர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

இவ்வாறு பழ நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சாவகச்சேரி நகர மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் – முன்னாள் அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்!



சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தாங்கி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது.

மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கும் நோக்குடன் அமரர்களான பொன்னுபழநி, புவனேஸ்வரி தம்பதியினரின் ஞாபகார்த்தமாக அவரது உறவினர்களினால் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தாங்கியை திறந்து வைத்து உரையாற்றிய செயலாளர் நாயகம்,



“சுமார் 400 வருடங்களுக்கு முன்னர் சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட சிவன் கோயில் தீர்த்த கிணற்றில் இருந்து நீர் பெற்றுக் கொள்ளப்பட்டு சுத்திகரிக்கப்படும் குடிநீரையும், அதற்கான கட்டமைப்புக்களையும் பாதுகாத்து பயன்படுத்த வேண்டியது சாவகச்சேரி மக்களின் கடப்பாடு.

மேலும், இந்த விடயத்தினை எனது கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் தொடர்ச்சியாக எனக்கு நினைவுபடுத்திய விடயத்தை முன்னகர்த்திய தோழர்களான மெடிஸ்கோ, தர்சன் ஆகியோருக்கும் தொல்லியல் திணைக்கள அதிகாரகள், மற்றும் நீர்தாங்கியை அமைத்திருக்கும் குடும்பத்தினர் ஆகியோருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்” எனத் தெரிவித்தார்.

கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட இந்த திட்டத்திற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க குறித்த கிணற்றின் நீரை பயன்படுத்துவதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்காத நிலையில் அப்போது அமைச்சராக இருந்த தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலையிட்டு, அனுமதியை பெற்றுக் கொடுத்ததுடன் நீர்தாங்கிக்கான அடிக்கல்லினையும் நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மாராட்சி பிரதேச அமைப்பாளர் மெடிஸ்கோ, உதவி அமைப்பாளர் தர்ஷன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வடமராட்சி கடலில் சட்டவிரோத தொழிலாளர்கள் அட்டகாசம் – வேடிக்கை பார்க்கும் கடற்படை!

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடலில் 50 மேற்பட்ட படகுகள் ஒளிபாய்ச்சி சட்டவிரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

17-03-2025 அன்று மாலை 5.30 மணியளவில் வெற்றிலைக்கேணி கடற்படை முகாமிற்கு அருகில் இருந்து சென்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட படகுகள் ஒளிவைத்து பல்லாயிரக்கணக்கான மீன்களை பிடித்துக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் குறித்த விடயத்தை கடற்படையினரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

இருப்பினும் கடற்படையினர் அது குறித்து அவர்கள் நடவடிக்கை எடுக்காது, போதைப் பொருளை மட்டும் கைப்பற்றும் நோக்கில் செயற்படுவதாகவும், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை இதுவரை கட்டுப்படுத்த முயற்சிக்கவில்லை என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.



கடற்படை முகாமிற்கு அருகாமையில் இருந்து சட்டவிரோதமாக மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் கைது செய்யப்படாமை குறித்து அப்பகுதி மீனவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

சமாச தலைவர் தங்கருபன் - 0770762049

வெற்றிலைக்கேணி கடற்படை அதிகாரி ரணசிங்க - 0770261034

# வடக்கில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் தொடர்பான கருத்தரங்கு!



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் ஏற்பாட்டில், “வடக்கு மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல்” தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் 19.03.2025 அன்று புதன்கிழமை இடம்பெற்றது.

யுனொப்ஸ் நிறுவனத்தில் கென்யாவில் பணிபுரியும் கலாநிதி வி.நவநீதன் அவர்கள் இந்த இரு நாள் பயிற்சிக் கருத்தரங்கின் வளவாளராகக் கலந்துகொண்டார்.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் எம்.கிருபாசுதன், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - பொறியியல் சேவைகள் எந்திரி ந.சுதாகரன், வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் சர்வானந்தா ஆகியோர் பங்கேற்றனர்.



ஆளுநரின் செயலாளர், இந்தப் பயிற்சிக் கருத்தரங்கை ஆளுநர் ஒழுங்கு செய்திருப்பதன் நோக்கத்தை தெளிவுபடுத்தினார். வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் எம்.கிருபாசுதன் மாகாணத்தின் ஒட்டுமொத்த நிலைமை தொடர்பில் சுருக்க விளக்கத்தை முன்வைத்தார். அதன் பின்னர் வளவாளர் கலாநிதி வி.நவநீதன் அவர்களால் பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அபிவிருத்தி மற்றும் திட்டமிடலுடன் தொடர்புடையதாகப் பணியாற்றும் திணைக்களத் தலைவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இதில் பங்கேற்றனர்.

கனடிய செய்திகள் Canadian News

# King Charles III Coronation Medal Presentation Ceremony, hosted by Hon. Mary Ng, Member of Parliament for Markham Thornhill.

## Markham Thornhill எம்பி மேரி இங் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இங்கிலாந்தின் 3வது மன்னர் சார்ள்ஸ் முடிசூட்டுப் பதக்கம் வழங்கும் வைபவம்



Markham - Thornhill தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மேரி இங் அவர்களது ஏற்பாட்டில் இங்கிலாந்து தேசத்தின் 3வது மன்னர் சார்ள்ஸ் அவர்களின் முடிசூட்டு விழாவைக் குறித்த பதக்கம் வழங்கும் வைபவம் 19-03-2025 புதன்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது.

மார்க்கம் நகரில் அமைந்துள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்ற இந்த அரச வைபவத்தில் முக்கிய உரையை பாராளுமன்ற உறுப்பினர் மேரி இங் அவர்கள் ஆற்றினார்கள்.

அதில் இவ்வாறான சிறப்புப் பதக்கங்கள் வழங்கப்பெடுவதன் நோக்கம் மற்றும் யார் யாரெல்லாம் இந்தப் பதக்கத்தை பெறுவதற்கு தகுதி பெற்றவர்கள் போன்ற விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு முடிசூட்டுப் பதக்கங்கள் பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்பெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்து அவர்கள் அனைவரும் தாங்கள் வாழும் நகரங்கள் அல்லது மாகாணத்தில் ஆற்றிய பொதுச் சேவைகள் போன்றவற்றை கணித்தே பதக்கங்கள் வழங்கப்பெறுகின்றன என்று குறிப்பிட்டார்.

அங்கு விசேட விருந்தினராக வருகை தந்த மார்க்கம் நகர சபையின் மேயர் பிராங் ஸ்கெப்பட்டி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மேரி இங் அவர்களது கடநத கால சேவையைப் பாராட்டியும் நன்றி தெரிவித்தும் அவருக்கு மார்க்கம் நகரசபையின் சார்பில் வாழ்த்துப் பத்திரம் ஒன்றை வழங்கிக் கௌரவித்தார்.

அங்கு பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து பதக்கங்களைப் பெற்ற 40 வெற்றியாளர்களில் நான்கு தமிழ் பேசும் அடங்கியிருந்தார்கள் அவர்கள் நால்வரும் கனடா வாழ் தமிழர்கள் மத்தியில் நன்கு அறிமுகமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது:

1. மார்க்கம் கிறின்பொறோ முதியோர் நலன் பேணும் அமைப்பின் தலைவி திருமதி. செல்வமணி அருள்ராஜசிங்கம். 2. மார்க்கம் பொக்ஸ்குருவ் முதியோர் நலன் பேணும் அமைப்பின் தலைவி திருமதி. சுந்தரேஸ்வரி யோகராஜா. 3. பல சமூக சேவை அமைப்புக்களின் முக்கிய பங்கு வகிக்கும் திரு. ஜேய் ஜெயகாந்தன். 4. சமூக சேவை அமைப்பான "மிஸ்டர் தமிழ்" அமைப்பின் நிறுவனர்களில் ஒருவரான சங்கர் பாலச்சந்திரன் ஆகியோரே மேற்படி இங்கிலாந்து தேசத்தின் 3வது மன்னர் சார்ள்ஸ் அவர்களின் முடிசூட்டு விழாவைக் குறித்த பதக்கங்கள் பெற்ற தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகள் ஆவார்கள்.

கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் மற்றும் Behind Me International Media ஊடக நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர்கள் ஆகியோர் அங்கு அழைக்கப்பட்டவர்களாக கலந்து கொண்டார்கள்.

**செய்தியும் படங்களும்: சத்தியன்**














YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் வாகன விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் உயிரிழப்பு!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் 20ம் திகதி வியாழக்கிழமை அன்று காலை உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ராஜலிங்கம் கேசவன் (வயது 48) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கடந்த 13ஆம் திகதி காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கி செம்மணி வீதியூடாக பயணித்துக்கொண்டு இருந்தார். இதன்போது அவ்வீதியால் வந்த அரச பேருந்து அவரை முந்திச் செல்ல முற்பட்டபோது அவர்மீது மோதியது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# உள்ளூராட்சி சபைகளின் ஊடாக வறிய மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்த உழைப்போம் – சுலக்சனின் அணி தெரிவிப்பு!



உள்ளூராட்சி சபைகளின் ஊடாக வறிய மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்த உழைப்போம் என தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தலைமையிலான சுயேட்சை குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்ப்பாண மாநகர சபை, வேலணை பிரதேச சபை, வலி. கிழக்கு பிரதேச சபை ஆகிய மூன்று சபைகளுக்கு வேட்பு மனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில், நாம் போட்டியிடும் உள்ளூராட்சி சபைகளில் கனிசமான ஆசனங்களை பெற்றுக்கொள்வோம். அதனூடாக எமது ஆதரவு இன்றி யாரும், சபைகளில் ஆட்சி அமைக்க முடியாது. எமது ஆரவுடனேயே ஆட்சி அமைக்க கூடிய சூழல் உருவாகும்.

எமது ஆதரவுடன் ஆட்சி அமைக்கும் சூழல் உருவாக்குவதன் ஊடாக வறிய மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்த முடியும்.

கடந்த காலங்களை போல் கட்சிகளின் கபடநாடகங்களை மக்கள் இனம் காண வேண்டும். தொடர்ந்தும் கபட நாடகங்கள் ஊடாக தங்களை தொடர்ந்தும் ஏமாற்ற அனுமதிக்க கூடாது.

நாங்கள் உள்ளூராட்சி சட்டத்தின் ஊடாக மேற்கொள்ள கூடிய அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்போம்.

கடந்த காலங்களில் நாம் பல உதவி திட்டங்களை எமது சொந்த பணங்களில் முன்னெடுத்தோம். எமக்கு அரசியல் அதிகாரங்கள் கிடைக்கும் போது வறிய மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துவோம் என தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் நிதிப் பங்களிப்புடன் திறந்து வைக்கப்பட்ட சந்தை தொகுதி!








பொது மக்களின் நிதிப் பங்களிப்போடு புனரமைக்கப்பட்ட நெல்லியடி கோவிற்சந்தை திறப்பு விழா 20ம் திகதி வியாழக்கிழமை அன்று காலை 10:30 மணியளவில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் கணேசன் கம்சநாதன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதை தொடர்ந்து மங்கள சுடர்கள் ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து தேசியக்கொடி, பிரதேச சபை கொடி என்பன ஏற்றப்பட்டதை தொடர்ந்து மக்களின் பூரண நிதி பங்களிப்புடன் கட்டிமுடிக்கப்பட்ட சந்தையின் இறைச்சிக்கடை, மீன் சந்தை தொகுதிகளை வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் தலைமை உரையை நிகழ்வின் தலைவரும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் நிகழ்த்தியதை தொடர்ந்து கருத்துரைகளை நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களான வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் நடராசா திருலிங்கநாதன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன், கோயிற்சந்தை அபிவிருத்தி கூட்டுறவு சங்க தலைவர் சட்டத்தரணி மகிந்தன், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் உட்பட பலரும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கோயில் சந்தை பிரதேச மக்கள், கோயிற்சந்தை பிரதேச அபிவிருத்தி கூட்டுறவு சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசம் சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கபந்துகொண்டனர். குறித்த சந்தை தற்காலிக கொட்டகையில் பலகாலமாக இயங்கிவந்திருந்த நிலையிலே மக்களால் நிதி ஔபுங்கமைக்கப்பட்டு புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர்களை சமூகப்பிறழ்வான செயல்களில் இருந்து கிராம மட்ட அமைப்புக்கள் மீட்க வேண்டும் என்கிறார் வடக்கு ஆளுநர்!



இளையோரை சமூகப்பணிகளிலும், கலைத்துறை, விளையாட்டுத்துறைகளில் ஈடுபடுத்தவேண்டும். அவர்களின் திசைமாற்றச் செய்யவேண்டும். சமூகப்பிறழ்வான செயற்பாடுகளிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கான இத்தகைய வழிகளை இவ்வாறான கிராமமட்ட மக்கள் அமைப்புக்கள்தான் முன்னெடுக்க முடியும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் குறிப்பிட்டார்.

அளவெட்டி தெற்கு கலைவாணி ஜனசமூக நிலைய முன்றலில் உருவாக்கப்பட்ட சரஸ்வதி சிலையை சமயாசாரப்படி திறந்து வைக்கும் நிகழ்வு 20ம் திகதி அன்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில், சனசமூக நிலையத்தின் தலைவர் வை.சின்னப்பு அவர்களின் அர்ப்பணிப்பை பாராட்டினார். சிறிய இடத்திலிருந்து இன்று இந்தச் சனசமூக நிலையம் வளர்ச்சியடைந்திருக்கின்றமைக்கு, சனசமூக நிலையத்தின் தலைமைத்துவமும் மக்களின் பங்களிப்புமே காரணம் என்று குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராக இருந்தபோதும், யாழ்ப்பாண மாவட்டச் செயலராக இருந்தபோதும், தற்போது ஆளுநராக இருக்கின்றபோதும் இங்கு வந்திருக்கின்றேன் என்றும் அவ்வாறு வருகைதருவதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

தலைவர் தனது உரையில் தமது பிரதேச வீதிகள் சீரின்மை தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்த நிலையில் அது தொடர்பில் தனது உரையில் பதிலளித்த ஆளுநர், தற்போதைய அரசாங்கம் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கே கூடுதல் கவனம் செலுத்தியிருக்கின்றது என்றும், அதற்கு அமைவாக இந்த ஆண்டு 5,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருகின்றது எனவும் குறிப்பிட்டார். இந்த ஆண்டு சிலவற்றை புனரமைப்பதுடன் எஞ்சியவற்றை அடுத்த ஆண்டுகளில் புனரமைக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மக்களின் ஆர்வமும், பங்களிப்பும் இருந்தால்தான் அபிவிருத்திகளை விரைவில் நிறைவேற்ற முடியும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், இந்தச் சனசமூக நிலையம் நூற்றாண்டுகளை கடந்து சேவையாற்றவேண்டும், என்றார்.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளர் சு.சுதர்ஜன், பிரதேச கிராம அலுவலர் க.அஜந்தன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.





# உயிரை பணயம் வைத்து சாவகச்சேரி பொலிஸார் அதிரடி – குவியும் மக்கள் பாராட்டு!



19ம் திகதி புதன்கிழமை அன்று இரவு அனுமதிப்பத்திரம் இன்றி கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ள நிலையில் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், அன்றிரவு 12.15 மணியளவில் பளையில் இருந்து அச்சுவேலி நோக்கி மணல் கடத்திச் சென்ற டிப்பரை சாவகச்சேரி பொலிஸார் வழிமறித்தவேளை குறித்த டிப்பர் நிற்காமல் சென்றது. இதன்போது சாவகச்சேரி பொலிஸார் வேகத்தடையை வீதியில் போட்டவேளை டிப்பரின் சக்கரங்கள் காற்றுப் போனது.

இந்நிலையில் டிப்பரை நிறுத்திவிட்டு சாரதி தப்பிச் சென்றுள்ளார். பின்னர் சாவகச்சேரி பொலிஸார் டிப்பரை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். இது குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக அனுமதிப்பத்திரம் இன்றி மணல் கடத்தி வரும் டிப்பர்களை மடக்கிப் பிடிப்பதற்கு சாவகச்சேரி பொலிஸார் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தமது உயிரையும் துச்சமாக மதித்து, சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படும் சாவகச்சேரி பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகளை மக்கள் பாராட்டி வருகின்றனர்.



# ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் திருக்குறள் நூல் மீது உறுதிமொழியேற்று உறுப்பினராகப் பதவியேற்ற கனடாவின் தமிழ் அரசியல் பிரமுகர் லோகன் கணபதி அவர்கள்

கனடிய செய்திகள் Canadian News

தனது அரசியல் பயணத்தை மார்க்கம் நகரசபை அங்கத்தவராக 2012ம் ஆண்டு வெற்றிகரமாக ஆரம்பித்த தற்போதைய ஒன்றாரியோ மாகாண சபையின் மார்க்கம் - தோர்ண்ஹில் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் மார்க்கம் நகர சபையில் எவ்வாறு 3 காலப்பகுதிகளின் 7ம் வட்டார அங்கத்தவராகப் பணியாற்றினாரோ, அதே போன்று தற்போது ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்திலும் தனது 3வது காலப் பகுதியை அதுவும் ஆளும் கட்சி உறுப்பினராக ஆரம்பிக்கும் வகையில் 20.03.2025 வியாழக்கிழமையன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு தனது அரசியல் பயணத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளார்.

ஒன்றாறியோ மாகாண அரசின் மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் உறுப்பினராக மூன்று காலப் பகுதியிலும் அதேவேளை கடந்த பாராளுமன்ற ஆட்சிக் காலப்பகுதியில் இரண்டு அமைச்சுக்களின் பாராளுமன்ற உதவியா-ளராகவும் விளங்கினார் லோகன் கணபதி அவர்கள் வியாழக்கிழமை அன்று தான் மாகாண சபை உறுப்பினராகப் பதவியேற்ற போது. உலகப் பொதுமை-றயாம் "திருக்குறள்" மீது பதவியேற்பு உறுதிமொழி எடுத்து தனது மாகாணஅரசு உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இவர், 2018ஆம் ஆண்டு ஒன்றாறியோ மாகாண அரசின் மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் உறுப்பினராகவும் பின்னர், மீண்டும் 2022ஆம் ஆண்டு பெருவாரியான மக்களின் ஆதரவுடன் அதே பகுதிக்கான சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்போது தனது மூன்றாவது காலப்பகுதியை ஆரம்பித்து மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் மாகாண அரசு உறுப்பினராக பணியாற்றவுள்ளார்.

இங்கே காணப்படும் படங்களில் ரொறன்ரோ மாநகரில் அமைந்துள்ள ஒன்றாரியோ மாகாண பாராளுமனறமான "குயின்ஸ்பார்க்" கில் தனது குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என அனைவ-ரோடும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# குப்பை மேடாக மாறும் கிளிநொச்சி நீதிமன்றிற்கு அருகாமையில் உள்ள வீதி!

**பு. கஜிந்தன்**

கிளிநொச்சி நீதிமன்றிற்கு அருகாமையில் உள்ள வீதியானது எந்தவித பராமரிப்பும் இல்லாமல் காணப்படுகின்றது. குறித்த விதியில் அதிகளவான கழிவுகள் மற்றும் மிருக எச்சங்கள் பிளாஸ்டிக் பொருட்கள் ஆங்காங்கே குவிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

நீதிமன்றத்திற்கு வரும் நபர்கள் குறித்த வீதியினை பிரதானமாக பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு எந்தவித பராமரிப்பும் இல்லாமல் இந்த வீதி இருந்தால் குறுகிய காலத்தில் மிகப்பெரிய குப்பைமேடாக மா-றிவிடும் என அச்சம் வெளியிடப்படுகிறது.

இவ்விதியானது கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட வீதி என தெரியவருகின்றது. குறித்த வீத-யில் துர்நாற்றம் வீசுவதால் மக்கள் அன்றாட பயணத்தினை மேற்கொள்ளும்போது அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.




NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM

Face Reading, Palm Reading, Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS

9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION


இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722

2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)

# ஆளுங்கட்சியா? எதிர்க்கட்சியா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

"யுத்த காலங்களில் எந்தச் சேவையும் இல்லாத காலத்தில் மிகவும் திறைமையாக பணிபுரிந்த அதிகாரிகள். இப்போது ஒரு வீதம்கூட இல்லை. யுத்த காலங்களில் வாகனம், போக்குவரத்து, தொழில்நுட்பம், தொலைத் தொடர்புகள் ஆகிய வசதிகளற்ற நிலையில் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தங்களுடைய சேவைகளை மிகவும் திறம்படச் செய்தார்கள். இப்போது அனைத்து வசதிகள் இருந்தும் மக்களை நாய் போன்று வழி நடத்துவது மிகவும் மன வேதனை அளிக்கின்றது..."

இவ்வாறு தெரிவித்திருப்பவர் வடமாகாண ஆளுநர் வேதநாயகன். கிளிநொச்சியில் கல்வி அறக்கட்டளை நிகழ்வில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் பேசிய பேச்சின் ஒரு பகுதி இது. அண்மை மாதங்களாக அவர் இது போன்று பல பேச்சுக்களை ஆற்றி வருகிறார். தனது நிர்வாகத்தின் கீழ்வரும் அரசு அலுவலகங்கள் தொடர்பாக அவர் வெளிப்படையாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறார்.

அவர் ஓர் ஆளுநர். யாழ். மாவட்டத்தின் அரச அதிபராக இருந்தவர். அரச அலுவலகங்களில் என்ன நடக்கிறது என்பது அவருக்கு நன்கு தெரியும். இப்பொழுது ஒற்றை ஆட்சிக் கட்டமைப்பின் ஆளுநர் என்ற அடிப்படையில் அவருக்கு நிறைவேற்று அதிகாரம் உண்டு. தற்துணிவு அதிகாரங்களும் உண்டு. அப்படியென்றால் அவருடைய நிர்வாகத்தின் கீழ் வரும் அரச கட்டமைப்பின் தவறுகளைச் சீர் செய்யும் விதத்தில் தற்துணிவுவான முடிவுகளை எடுத்து ஏன் அமல்படுத்தக் கூடாது? அப்படிச் செய்யாமல் ஒரு முறைப்பாட்டுக்காரர் போல அவர் தொடர்ச்சியாக ஏன் அரச அலுவலகங்களை நோக்கி குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்?

இதைப் போலத்தான் யாழ். பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும் சில விடயங்களில் நடந்து கொள்கிறார். வேந்தர் என்றால் அரசர். அவருக்கும் நிறைவேற்று அதிகாரங்களும் தற்துணிவு அதிகாரங்களும் உண்டு. அவரும் ஒரு பகிரங்க மேடையில் பல்கலைக்கழகத்தில் நிகழும் பாலியல் முறைகேடுகள் தொடர்பாக சில விடயங்களை பேசியிருக்கிறார். அவர் ஒரு துணை வேந்தர் அவர் நினைத்தால் தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட விரிவுரையாளர்களை கட்டுப்படுத்த முடியும். அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஆனால் அவ்வாறெல்லாம் செய்யாமல் பொது மேடைகளில் முறைப்பாடு செய்பவராக அவர் மாறியது ஏன்?

யார் யாரெல்லாம் குறிப்பிட்ட ஒரு விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அவர்களே முறைப்பாட்டுக்காரர்களாக மாறி நின்று முறைப்பாடுகளைப் பகிரங்கமாக முன் வைப்பதை எப்படிப் பார்ப்பது?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொறுப்புள்ள அமைச்சரான சந்திரசேகரனும் அப்படித்தான் நடந்து கொள்கிறார். வட மாகாண அரச விவகாரங்களுக்கு ஒரு விதத்தில் அவர்தான் பொறுப்பு. வட மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தியைக் கட்டியெழுப்பியது அவர்தான். ஆனால் அவர் அண்மையில், பிரதமர் ஹரிணி யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தபொழுது, மானிப்பாயில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் என்ன சொன்னார்? அநாதை இல்லங்களில் வாழும் பெண்களைப் விபசாரத்துக்குப் பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைத்திருக்கிறதாம். அந்தப் பேச்சில் அவர் மேடையில் பயன்படுத்தக்கூடாத வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தார். பெண்கள் பராமரிக்கப்படும் சில இல்லங்களில் பெண்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுவதாகப் பொருள் கொள்ளத்தக்க விதத்தில் அவருடைய பேச்சு அமைந்திருந்தது. அவர் ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சர். நிறைவேற்று அதிகாரமும் தற்துணிவு அதிகாரமும் உடையவர். குறிப்பிட்ட பெண்கள் இல்லத்தில் அவ்வாறு துஷ்பிரயோகம் இடம்பெற்றிருந்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அறிவிக்க வேண்டியவர் அவர். ஒரு அமைச்சராக, தற்துணிவு அதிகாரம் உடையவராக, அவர் நினைத்தால் இந்த விடயத்தில் தற்துணிவோடு தலையிட்டு குறிப்பிட்ட இல்லங்களில் நடக்கக்கூடிய முறைகேடுகளை முடிவுக்கு கொண்டு வரலாம்.

அவர் அவ்வாறு பேசிய அதே காலப்பகுதியில், மற்றொரு பேச்சில் யாழ்ப்பாணம் இப்பொழுது அதிகம் குடிப்பவர்களைக் கொண்ட ஒரு மாவட்டம் என்று குற்றம் சாட்டியிருந்தார். இருக்கலாம். அதே சமயம் யாழ்ப்பாணத்தில் குடி பானங்களை நுகரும் படைத்தரப்பினரின் எண்ணிக்கையும் அதற்குள் அடங்குமா இல்லையா என்பதனை அவர் தெளிவுபடுத்த வேண்டும். ஏனென்றால் யாழ்ப்பாணத்தின் நிலை கொண்டிருக்கும் படையினரின் எண்ணிக்கையானது அங்குள்ள ஜனத்தொகையோடு ஒப்பிடுகையில் அளவுப் பிரமாணத்துக்கு அதிகமானது என்பதனை கொழும்பை மையமாகக் கொண்ட ஆராய்ச்சி நிறுவனங்களே வெளிப்படுத்தியுள்ளன. எனவே யாழ்ப்பாணத்தில் குடிப்பவர்களின் எண்ணிக்கை என்று பார்க்கும்பொழுது அதற்குள் படையினரும் அடங்குவார்களா? இல்லையா? என்பதனை அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும். மேலும் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு. ஏனென்றால் அவர்தான் யாழ்ப்பாண விவகாரங்களை கையாண்டு வருகிறார். முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்ட ஒரு அமைச்சர் முடிவை எடுக்காமல் ஏன் முறைப்பாடு செய்கிறார்?

அப்படித்தான் அரசுத் தலைவர் அனுரவும் வடமகாணத்துக்கு வரும் நிதி செலவழிக்கப்படாமல் திரும்பிச் செல்கிறது என்ற பொருள்பட யாழ்ப்பாணத்தில் வைத்து உரையாற்றியிருந்தார். நாட்டில் மாகாண சபை உள்ளூராட்சி சபைகளில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இப்பொழுது இல்லை. அங்கெல்லாம் அதிகாரிகளின் ஆட்சிதான் நடக்கின்றது. இந்த அதிகாரிகள் அரச நிர்வாகக் கட்டமைப்பின் ஒரு பகுதியினர். எனவே தமது நிர்வாகக் கட்டமைப்பின் ஒரு பகுதியாகக் காணப்படும் அரசு அதிகாரிகளை ஏவி ஒரு மாவட்டதுக்கு வழங்கப்பட்ட நிதி முழுமையாக, விரைவாக செலவழிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு நிறைவேற்று அதிகாரம் உடைய ஒரு ஜனாதிபதிக்கு உண்டு. விக்னேஸ்வரனின் காலத்தில் நிதி திருப்பி அனுப்பப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை விக்னேஸ்வரன் ஏற்கனவே மறுத்துவிட்டார். விக்னேஸ்வரனுக்கு பின்னரான காலகட்டத்தில் நிதி திருப்பி அனுப்பப்பட்டு இருந்தால் அதற்கு கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கம்தான் பொறுப்பு.

நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு ஜனாதிபதி யாரைக் குற்றம் சாட்டுகிறார்? ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி என்ற அடிப்படையில் அவருடைய நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியாகக் காணப்படும் அரசு அலுவலகங்களை அவர் குற்றம் சாட்ட வேண்டுமா? அல்லது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலைமையைச் சீராக்க வேண்டுமா? ஒரு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி இங்கே முறைப்பாட்டுக்காரராக மாறியது எப்படி?

அவர் மட்டுமல்ல அவருடைய நாடாளுமன்றத்தில் காணப்படும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் ஆளுங்கட்சி என்பதை மறந்து எதிர்க்கட்சிகளைப் போல முறைப்பாடு செய்கிறார்கள். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் பொழுது தமிழ்ப் பகுதிகளில் போதைப் பொருள் பாவனை குறித்து சுட்டிக்காட்டுகிறார்கள். போதைப்பொருள் பாவனை; போதைப்பொருள் வலைப் பின்னல் தொடர்பாக தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச படைத்தரப்பையும் காவல்துறையையும் குற்றம்சாட்டுகிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை வெளிப்படையாகச் செய்யவில்லை. ஆனால் அவர்களும் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது முறைப் பாட்டுக்காரர்களாகத்தான் தெரிகிறார்கள். ஆனால் அவர்கள்தான் அரசாங்கம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கத்தின் உறுப்பினர்கள் அவர்கள். அதுதொடர்பாக நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமே தவிர, எதிர்க்கட்சிகளைப் போல நாடாளுமன்றத்தில் போய் நின்று முறைப்பாடு செய்து கொண்டிருக்க முடியாது.

மேற் கூறப்பட்டவற்றைத் தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? யாரிடம் நிறைவேற்று அதிகாரம் அல்லது தற்துணிவு அதிகாரம் உண்டோ, அவர்கள் எல்லாரும் முறைப்பாட்டுக்காரர்களாக மாறுகிறார்கள்.

குறிப்பாக ஆளுநர் குற்றஞ்சாற்றுவது தமிழ் நிர்வாக அதிகாரிகளையும் தமிழ் அரசு அலுவலர்களையும்தான். இவ்வாறு அரசு அலுவலர்களைக் குறை கூறுவது அல்லது அவர்களைக் குற்றவாளிகளாகக் காட்டுவது என்பது மருத்துவர் அர்ஜுனாவின் எழுச்சிக்குப் பின் மேலோங்கி வரும் ஒரு போக்கு. ஆனால் அர்ஜுனா குற்றச்சாட்டுவது என்பது வேறு, அதையே ஆளுநர் செய்வது என்பது வேறு.

இவ்வாறு பல்வேறு தரப்புகள் அரசு அலுவலகங்களை நோக்கிக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் போக்கு என்பது வடக்குக்கு வெளியே பெருமளவுக்கு இல்லை என்று ஒரு மூத்த உயர் நிர்வாக அதிகாரி கவலைப்பட்டார். வடக்குக்குள் மட்டும் இந்த குற்றச்சாட்டுகளை முன் வைப்பதற்கு பின்னால் வேறு உள் நோக்கங்கள் உண்டா? என்ற சந்தேகத்தை அது கிளப்புகின்றது.

இக் குற்றச்சாட்டுக்கு இலக்காகும் அநேகமானவர்கள் தமிழ் அரசு அலுவலர்கள்தான். இதன் மூலம் அரசாங்கத்துக்கு எதிராக மேலெழக்கூடிய எதிர்ப்புணர்வை தமிழ் அரசு அலுவலர்கள் மீது திருப்புவதன் மூலம் அரசாங்கம் தப்பிக்கொள்ளப் பார்க்கின்றதா? அல்லது பொறுப்புக்கூற வேண்டிய, நிறைவேற்று அதிகாரமுடைய, தற்துணிவாக முடிவுகளை எடுக்க வேண்டிய தரப்புக்கள் தங்களுடைய பொறுப்புகளைத் துறக்கப் பார்க்கின்றனவா?

இப்படிப் கேட்பதன் மூலம் அரச அலுவலகங்களில் தமது செல்வாக்கைப் பிரயோகிக்க முடியாத சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை இக் கட்டுரை குறைத்து மதிப்பிடுகிறது என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அரசு அலுவலகங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் எப்பொழுதும் உண்டு. அது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசு நிர்வாகம்தான். ஏனென்றால் அரச திணைக்களங்கள் யாவும் மத்திய அரசாங்கத்தின் உபகரணங்களே.

அதனால்தான் தமிழ் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பு சிங்கள பௌத்த மயமாக்கல் போன்றவற்றை மத்திய அரசாங்கத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சில திணைக்களங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் முன்னெடுத்து வருவதாக குற்றம் சாட்டப்படுகிறது. இக் குற்றச்சாட்டுகளின் பின்னணியில், வடக்கில் உள்ள அரச அலுவலகங்கள் வினைத்திறனோடு செயல்படவில்லை என்று கூறி அதே அரசுக் கட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் அதன் மீது குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள். இதை எப்படிப் பார்ப்பது?

மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வரும் திணைக்களங்கள் சில சிங்கள பௌத்த மயமாக்கலைத் தீவிரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்க, மாகாண நிர்வாகத்தின் கீழ் வரும் அரசு அலுவலகங்கள் மீது அதே மத்திய அரசாங்கம் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் ஒரே அரசுக் கட்டமைப்பின் இரு வேறு செயல்பாடுகள்தான். இவை இரண்டுமே ஒரே நோக்கத்தை கொண்டவை. ஒன்று சிங்கள பௌத்த மயமாக்கலை நேரடியாகச் செய்கின்றது. இன்னொன்று தமிழ் நிர்வாகிகளுக்கு எதிராக தமிழர்களையே திருப்பி விடுவது. இதன்மூலம் தமிழ் மக்கள் தங்களுக்குள் தாங்களே மோதி தங்கள் சக்தியை வீணாக்குவது. இந்த உள்நோக்கத்தோடுதான் வடக்கில் அதிகாரிகளை நோக்கி ஒரு குற்றச்சாட்டு அலை எழுப்பப்படுகிறதா?

கனடிய செய்திகள் Canadian News

# ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் மீண்டும் திருக்குறள் நூல் மீது உறுதிமொழியேற்று அமைச்சராகப் பதவியேற்ற கனடாவின் இளம் தமிழ் அரசியல் பிரமுகர் விஜய் தணிகாசலம்



19.03.2025 புதன்கிழமையன்று ஒன்றாரியோ மாநில முதல்வர் டக் ஃபோர்ட் அவர்களால் விஜய் தணிகாசலம் அவர்கள் சுகாதார அமைச்சின் உளநலத்துறையின் இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். விஜய் தணிகாசலம் அவர்கள் மூன்று தடவைகள் தொடர்ச்சியாக ஒன்றாறியோ மாநிலத்தின் ஸ்காபரோ - றூஜ் பார்க் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் மூன்று காலப் பகுதியிலும் இணை அமைச்சராகவும் பதவி வகிக்கும் மக்கள் ஆதரவை அவர் பெற்றுள்ளார். இந்தத் தடவையும் திருவள்ளுவர் இயற்றிய உலகப் பொதுமறையாம் "திருக்குறள்" மீது பதவியேற்பு உறுதிமொழி எடுத்து தனது பதவிகளை ஏற்றிருந்தார். புலம்பெயர்ந்த கனடியத் தமிழர்களின் வரலாற்றிலும், தெற்காசியாவிற்கு வெளியேயுள்ள தமிழர்கள் மத்தியிலும் திருக்குறள் மீது தனது பதவியேற்பு உறுதிமொழியை எடுத்துக்கொண்ட அரசியல்வாதியாக விஜய் தணிகாசலம் அவர்கள் விளங்குகிறார்.

இவர், 2018ஆம் ஆண்டு ஸ்காபரோ றூஜ் பார்க்கின் முதலாவது தமிழ், மாகாண சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவாகி வரலாறு படைத்தார். அத்துடன், மீண்டும் 2022ஆம் ஆண்டு பெருவாரியான மக்களின் ஆதரவுடன் அதே பகுதிக்கான சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2023இல் போக்குவரத்துத் துறைக்கான இணை அமைச்சராகப் பதவி உயர்த்தப்பட்ட இவர், 2024இல் வீட்டுவசதித்துறைக்கான இணை அமைச்சராகப் பதவியேற்று, இன்று சுகாதார அமைச்சின் உளநலத்துறையின் இணை அமைச்சராக சமூகத்துக்கான தனது அர்ப்பணிப்புடனான பணியைத் தொடங்குகிறார்.

தனது சமூகத்திற்கும், ஒன்றாறியோ மாநிலத்தின் நலனுக்கும் அயராது பாடுபடும் விஜய் அவர்கள், ஸ்காபரோ நிலக்கீழ் தொடரிவழித்தட விரிவாக்கம், அப்பகுதியில் முதலாவது மருத்துவப் பள்ளியை நிறுவியமை, ஸ்காபரோ சுகாதாரக் கட்டமைப்பின் மீள்மேம்பாடு போன்ற பல மாற்றங்களைத் தனது பிரதேசத்தில் கொண்டுவந்ததில் முக்கிய பங்காற்றியுள்ளார். அத்துடன், 2023ஆம் ஆண்டில் பொதுப் போக்குவரத்துத்துறையில் கொண்டுவரப்பட்ட "ஒற்றைக் கட்டணத்" திட்டத்தைத் தொடக்கி வைத்ததன் மூலம், பயணச் செலவினைக் குறைத்து, பயணிகள் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 1600 டொலர்களைச் சேமிப்பதற்கான வழியினையும் ஏற்படுத்திக் கொடுத்தார். கடந்த ஆண்டு இவர் வீட்டுவசதித்துறைக்கான இணை அமைச்சராகப் பதவி வகித்தபோது மாநிலத்துக்கான குடியிருப்பு வசதிகளில் தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்ட வீடுகள் உட்பட்ட புதுமைமிகு முறையில் குடியிருப்பு நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கான முயற்சிகளை முன்னகர்த்தியிருந்தார்.

தனது 14 வயதில் கனடாவிற்கு புலம்பெயர்ந்த ஓர் ஈழத்தமிழ் மகன் இன்று கனடாவின் ஒன்றாறியோ மாநிலத்தில் அமைச்சராகப் பதவிவகிப்பதுடன் தமிழ் சமூகத்தின் அடையாளமாகவும் ஒன்றாறியோ மக்களினது குரலாகவும் கடமையாற்றுவதையிட்டு நாம் அனைவரும் பெருமையடைகின்றோம். அனைத்திலும் புதுமையைப் புகுத்தல், சேவை மனப்பான்மை, அவற்றுக்கான தளராத நிலைப்பாடு ஆகியவற்றின் மூலம் அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் தனது சமூகத்திலும் ஒன்றாறியோ மாநிலமெங்கும் நிலைத்த மாற்றத்தினை ஏற்படுத்துவதிலும் உறுதியாகவுள்ளார். இவரது தலைமைத்துவப் பண்பு அனைவரையும் ஈர்ப்பதுடன், ஏனையோருக்கும் ஓர் உந்துவிசையாக விளங்குகிறது.





## கனடா ஸ்காபுறோ நகரில் Youth Empowerment and Community Service அமைப்பினர் நடத்தும் அன்னையர் தின விழா

11-05-2025 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறவுள்ள அன்னையர் தின விழாவிற்கு, அழைக்கப்பெற்ற விருந்தினர்களை வரவேற்கக் காத்திருக்கும் Centre For Youth Empowerment and Community Service அமைப்பின் இயக்குனர் சபை அங்கத்தவர்கள். (647) 891-7725 or (647) 762-9512 என்னும் இலக்கங்களோடு ஏனையவர்களையும் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றனர்.



NISSAN | VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு
சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com




**Carefirst Family Health Team**

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24




# மூத்தோர் மேம்பாட்டுக் கழகம்
# (கட்டளைக் கலிப்பா)

*மூத்தோர் வந்திங்கு முகமும் பூரித்து*
*முன்னிலைச் செயலை மகிழ்வாய்ச் செய்வார்*
*ஊத்தை இல்லா உளமுடன் சேர்ந்திங்கு*
*ஒற்றுமை ஓங்க ஒன்றாய் கூடுவோமே*
*நீத்தோர் தினத்தையும் நினைவில் கொண்டே!*
*நிகழ்ச்சிகள் நடாத்தி நிறைவு செய்வோம்*
*கூத்தும் ஆடியே கும்மியும் அடிப்போம்*
*காத்திரம் குறையாக் கல்வியும் கற்போமே!*

*அகணி என்றொரு அன்பான ஆதவன்*
*அறிவு புகட்ட அமைப்பை ஆக்கியே!*
*முகமன் பாராது மூத்தோர் எங்களுக்கு*
*முத்தான கணினிக் கல்வியைக் கற்பித்தும்*
*பகவன் போலவே பண்போடு பழகி*
*புகட்டிய மரபு மாறாக் கவியும்*
*பகவான் போன்றே புதுக்கவி தையையும்*
*புரிய வைத்துப் புண்ணியம் தேடினாரே!*

*நன்றாய்ப் பழகும் நாகேந்திர ஆசான்*
*நட்பாய் ஆங்கிலம் நயமாய்க் கற்பித்து*
*அன்பு அழகு அமைதி மேலிட*
*ஆத்ம சுத்தியாய் அறிவைப் போதிப்பார்*
*பொன்னைப் போன்றொரு பரிசுத்த ஆத்மா*
*பண்பாய்ப் பணிவாய்ப் பாடம் நடாத்துவார்*
*அன்னார் எமக்கு அருளால் வாய்த்தது*
*ஆன்றோர் அளித்த அருமைக் கொடையே!*

*சயானா என்னும் சிங்காரச் சிற்றிடையாள்*
*சிறப்பாய் நாங்கள் சுற்றுலா போவதற்கு*
*தயாராய் இடங்கள் தரமாய்த் தேர்ந்துமே!*
*துணையாய் எம்முடன் சேர்ந்தே வந்தாரே!*
*அயரா மனத்துடன் ஆவல் மேலிட*
*அனைத்து இடமும் அழகாய்க் காட்டினார்*
*உயரா இல்லா உறுதி மனத்துடன்*
*உவப்பாய் ஒன்றாக ஊர்வந்து சேர்ந்தோமே!*

*அயரா – –தளர்ச்சியின்றி பகவன் – –கடவுள்*
*உயரா – –வருத்தமின்றி*
*பகவான் – –தெய்வீகக் குணங்கள் நிறைந்த பெரியோன்.*

---

**ஆக்கம் பாவலர் மார்க்கம் சந்திரன்( 416) 844-7453**

# மரண அறிவித்தல்

**எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி இருபாலை, மார்க்கம் – கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பேரின்பராணி தவரத்தினம் அவர்கள் 12.03.2025 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

**தோற்றம்: 07-02-1951**
**மறைவு: 12-03-2025**



## திருமதி. பேரின்பராணி தவரத்தினம்

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பாறிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை சின்னத்தங்கம் அவர்களின் பாசமிகு மருமகளும்,

தவரத்தினம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தரி) அவர்களின் பாசமிகு மனைவியும்,

பிரபாஜினி, மகசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், டாக்டர் மயிலாஷன், துஸ்யா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஸ்வாதிஹா, வினுஸாரா, பொற்சாயிஹா ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,

காலஞ்சென்ற இராசம்மா (UK), சரஸ்வதி, தம்பையா, கனகமணி (Swiss), செல்வரத்தினம் (UK), சிவராசா (France) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற தியாகராசா, காலஞ்சென்ற சந்திரசேகரம், சாந்தினி, இலங்கைநாதன் (Swiss), உமாதேவி (UK), மதிவதனி (France) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும்.

ரவீந்திரன் (France), ரதிகரன் (UK), கேதீஸ்வரன் (UK), குகனேஸ்வரன் (UK), சித்திரேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், திலீபன் (Swiss), தீபிகா (Swiss) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், கஜனி (Canada), ஜனகன், சயந்தன் (Canada), டயானி (UK), டிலானி (UK), டனுஷன் (UK), நிவேதா (France) சுவேதா (France), நிவேதன் (France) ஆகியோரின் பாசமிகு அத்தையும்,

கந்தையா – தங்கம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் – மனோன்மணி ஆகியோரின் பாசமிகு மருமகளும், மயில்வாகனம்-ஜெயலட்சுமி, பாஸ்கரன் - மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சம்பந்தியுமாவார்.

***அன்னாரது பூதவுடல் Saturday. March 22nd, 2025 (5:00pm – 9:00pm) மற்றும் Sunday. March 23rd, 2025 (8:00am – 9:00am) Chapel Ridge Funeral Home இல் (8911 Woodbine Avenue, Markham, Ontario L3R 5G1) பார்வைக்கு வைக்கப்பட்டு, Sunday. March 23rd, 2025 காலை 9:00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, அதைதொடர்ந்து Sunday. March 23rd, 2025 காலை 11:30 மணிக்கு Highland Hills Crematorium (2 Stalwart Industrial Drive, Gormley, ON) இல் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்புகளுக்கு:**
தவரத்தினம் (கணவர்): +94740996344
பிரபாஜினி (மகள்): +16477072976 | மகசங்கர் (மகன்): +14168960069, +94779116209
Dr. மயிலாஷன்: +16478251937 | சித்திரேஸ்வரன் (பெறாமகன்): +94779451265

Canadian Women Council

We Invite You To Our FIRST ANNUAL TALENT SHOW

# Resonance 2025

Hosted By

## Canadian Women Council

We welcome you all to join us as we appreciate and enjoy our new talents who have worked hard to break the stereotypes around age and learning.

**அர்ப்பணிப்பும் திறமையும் கொண்ட எம் கனடியக் கலைஞர்களுக்கும் பாடகர்களுக்கும் மேடைகள் வழங்குவோம்**

**Date:** Sunday, April 6, 2025
**Venue:** Thamil Isai Kalaamanram of Ontario
Unit 3 - 1120 Tapscott Rd, , Scarborough, ON M1X 1E8
**Time:** 3:00 PM to 9:00 PM

Contact us at 647-505-4253 or via email at canadianwomencouncil@gmail.com

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா "புதிய குரல்" இணைய பத்திரிகை நடத்திய 'Targeting Muslims in Sri Lanka" என்னும் நூல் வெளியீடு மற்றும் ஊடக விருதுகள் வழங்கல் விழா



## தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்களுக்கு எதிரான மறைமுகமான தாக்குதல்களையும் படுகொலைகளையும் நடத்திய ரணில், மகிந்த ராஜபக்ச, கோட்டாபாய ராஜபக்ச மற்றும் பிரேமதாச ஆகியோரின் கொலை வெறியை அம்பலப்படுத்திய ஒரு காத்திரமான அரசியல் கருத்தரங்கு

16-03-2025 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று மாலை கனடா - ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள வரவேற்பு மண்டபத்தில் கனடாவின் "புதிய குரல்" இணைய பத்திரிகை நிறுவனம் நடத்திய ''Targeting Muslims in Sri Lanka'' என்னும் நூல் வெளியீடு மற்றும் ஊடக விருதுகள் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.

மேற்படி நிகழ்விற்கு பத்திரிகையின் ஆசிரியரும் ''Targeting Muslims in Sri Lanka'' என்னும் நூலை எழுதியவருமான கலாநிதி ஏ.எம்.எம். பகாத் தலைமைதாங்கினார்.







மேற்படி விழாவில் கனடா "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உபு தலைவர்களில் ஒருவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் மற்றும் "யுகம்" வானொலி நிலையத்தின் அதிபர் கணபதி ரவீந்திரன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பெற்றன.

அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் மற்றும் கலை இலக்கிய. வர்த்தக நண்பர்கள் என பலர் கலந்த சிறப்பித்தனர்.

மேற்படி "புதிய குரல்" இணைய பத்திரிகை நடத்திய ''Targeting Muslims in Sri Lanka'' என்னும் நூல் வெளியீடு மற்றும் ஊடக விருதுகள் வழங்கல் விழாவின் ஆரம்பத்தில் அது ஒரு அமைதியான கருத்தரங்காக அமையும் என்று எதிர்பார்த்திருக்க மேற்படி ''Targeting Muslims in Sri Lanka'' என்னும் நூல் பற்றி விமர்சனத்தை ஆங்கிலத்தில் வழங்கிய சட்டத்தரணி பிரசன்னா பத்திராஜ அவர்களின் மேற்படி நூல் பற்றியும் அதற்கு மேலாக வெளியே சென்று எவ்வாறு இலங்கையின் முதலாளித்துவ. இனவாத மற்றும் தொழிலாளர் விரோதப் போக்கு கொண்ட தென்னிலங்கை அரசியல்வாதிகள் வதைமுகாம்களை இராணுவம் மற்றும் பொலிஸ் ஆகியோரது ஆதரவோடு நடத்தி அவற்றுள்ள தமிழ். சிங்கள. இஸ்லாமிய சமூகங்களில் அரச பயங்கரவாதத்தின் அடக்கு முறைக்கு எதிராகப் போராடுகின்ற மற்றும் குரல் கொடுக்கின்ற பட்டதாரிகள். மாணவர்கள். அரசியல் செயற்பாட்டாளர்கள். மனித உரிமைகளுக்கு ஆதரவாக குரல் கொடுக்கின்ற சட்டத்தரணிகள் என பல்வேறு தரப்பினரையும் கைது செய்து. வதை முகாம்களின் அடைத்து வைத்து சித்திரவதை செய்தல். கண்களைப் பிடுங்குதல். பெண்களை மானபங்கப்படுத்தல். கொலை செய்தல் போன்ற பாதகங்களை கூசாமல் செய்தார்கள் என்றும் மேலும் இலங்கையில் வாழும் இனங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்தி இனக்கலவரங்களை உண்டாக்கி அதன்போது சாதாரண மக்களே தொழிலாளர் விவசாயிகள் இனரீதியாக மோதிக்கொள்ளும் கலவரங்களை ஏற்படுத்தினார்கள் என்பதை விரிவாக எடுத்துரைத்து அன்று வெளியிடப்பெற்ற கலாநிதி ஏ.எம்.எம். பகாத் எழுதிய ''Targeting Muslims in Sri Lanka'' என்னும் நூலின் அவசியத்தை விளங்கவைத்தார். அந்த உரைநிகழும் போது சபையில் அமைதி நிலவிய வண்ணம் சட்டத்தரணியின் உரையை வெளியே உள்ள ஆயிரக்கணக்கானவர்களும் பார்த்தும் கேட்டும் மகிழ யுகம் வானொலி கிருஸ்ணா லைப் ஊடகம் - தமிழ் ஆரம் ஊடகம் - ஜிரிஏ கெங்கா ஊடகம் பிகைன்ட் மீ இன்டர்நேசனல் ஊடகம் ஆகியவற்றின் ஊடகங்கள் வழி செய்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் மேற்படி விழாவில் கனடா "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உப தலைவர்களில் ஒருவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் மற்றும் "யுகம்" வானொலி நிலையத்தின் அதிபர் "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகளும் கனடா "ஈழமுரசு" பத்திரிகையின் நிறுவனர் கண்ணன் மற்றும் பிரான்ஸ் தேசத்திலிருந்து அழைக்கப்பெற்றிருந்த ஊடகவியலாளர் திரு. குருபரன் நாகேஸ்வரன் ஆகிய அர்ப்பணிப்புக்கள் நிறைந்த ஊடகவியலாளர்கள் என்ற விருதுகளும் வழங்கப்பெற்றன.

அத்துடன் மேற்படி புதிய குரல் இணையவழிப் பத்திரிகை நடத்திய அந்த விழாவில் கலந்து கொண்ட அனைவரும் பல தகவல்களை கேட்டுத் தெளிந்து கொண்டவர்களாகவும் ஊடகங்களின் அவசியம் பற்றி அறிந்து கொண்டவர்களாகவும் அத்துடன் தமிழ், சிங்கள. இஸ்லாமிய மக்களுக்கு எதிரான மறைமுகமான தாக்குதல்களையும் படுகொலைகள நடத்திய ரணில். மகிந்த ராஜபக்ச,கோட்டாபாய ராஜபக்ச மற்றும் பிரேமதாசஆகியோரின் கொலை வெறி தொடர்பான கொடுமையான மனப்போக்கு ஆகியவற்றை தெளிவுபடுத்தும் ஒரு விழாவாக விளங்கியது. அத்தடன் தென்னிலங்கையில் இஸ்லாமிய மக்களின் வர்த்தக மற்றும் பண்பாடு சார்ந்த வளர்ச்சியை கண்டு கலக்கமடைந்து இனவாதப் போக்கை அந்தப் பகுதிகளின் தூண்டிய ஏனைய அரசியல்வாதிகளின் மனப்பாங்கு ஆகியவற்றை அறியக் கூடிய ஒரு கருத்தரங்காக விளங்கியது என்றால் அது மிகையாகாது.



















இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.



சிவமயம்



# சனிப்பெயர்ச்சி மகாயாகம்



**சனிப்பெயர்ச்சி திருக்கணித பஞ்சாங்கப்படி (29-03-2025) நிகழவுள்ளது.**

நிகழும் குரோதி வருடம் மார்ச் மாதம் (29-03-2025) பங்குனி 15ம் நாள் சனிக்கிழமை, “அமாவாசை” கூடிய நல்வேளையில் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு சனீஸ்வரபகவானுக்கு காலை 9.00மணி முதல் 12.30 மணிவரை மிகவும் சிறப்பாக மகாயாகம் நடைபெற உள்ளது இதில் மெய்யடியார்கள் கலந்து கொண்டு சனிபகவானின் அருட்கடாட்சத்தை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## மகாயாகத்தினை நடாத்தும் பிரதான குருக்கள்.

‘சர்வசாதகம்’ சிவ ஸ்ரீ M. முருகன் சிவாச்சார்யார் B.A
பிரம்ம ஸ்ரீ ஈஸ்வர சாஸ்திரிகள்

**பிரதான உபயம்**- திரு. ராம்குமார் குடும்பம்

குறிப்பு:-
அமாவாசையில் செய்யும் தான,தர்மம், யாக, மந்திர உச்சாடனங்களை கேட்பது கர்ம வினையை குறைக்கும், கிரகதோச நிவர்த்தி மூலம் வாழ்வில் நன்மை பயக்கும்.

**பரிகாரம் செய்யவேண்டிய ராசிகள்**

மேசம், மிதுனம், சிம்மம், கன்னி, தனுசு, கும்பம், மீனம்

இதில் கலந்து கொள்பவர்கள் 416-721-0532 என்ற தொலைபேசி இலக்கத்தில் அழைத்து முன்பதிவு செய்து கொள்ளவும்.

சிருங்கேரி ஆலய யாக மண்டபம்
80 Brydon drive, Etobicoke, ON. (M9W 4N6)

அனைவரையும் வருக வருக என்று அன்போடு அழைக்கின்றோம்.

‘சர்வசாதகம்’ சிவ ஸ்ரீ M. முருகன் சிவாச்சார்யார் B.A
ஸ்ரீ குரு. S.K சி.கி.பிரதாப் (ALP ஜோதிடர்)




# "பட்டலந்த வதை முகாம்" பதறும் சிங்களக் கட்சிகள்

**"ஜனாதிபதி மாளிகையின் இருட்டறைக்குள் கிடந்த "பட்டலந்த அறிக்கை"க்கு அல்ஜசீரா தொலைக்காட்சி வெளிச்சம் பாச்சியதால் அன்றைய, இன்றைய ஆட்சியாளர்களின் முகங்கள் இருண்டு போயுள்ளன. பட்டலந்தை அறிக்கை தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் ஆரம்பமாகும் போது ஒவ்வொரு கட்சியினரும் மற்றையவர்கள் செய்த படுகொலைகளை அம்பலப்படுத்தப் போகின்றனர். இதனால் இந்த "பட்டலந்த அறிக்கை" சிங்கள ஆட்சியாளர்களினதும் ஜே.வி.பி.யினரினதும் படைகளினதும் கொடூர முகத்தை மீண்டும் ஒருதடவை வெளிச்சம் போட்டுக் காட்டப் போகின்றது."** ------------------------------------------------------- **- கே. பாலா ----**

ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாச ஆட்சி புரிந்த காலத்தில் இளைஞர் விவகார, தொழில்வாய்ப்புக்கள் அமைச்சராகவும் பின்னர் கைத்தொழில் அமைச்சராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்கவினால் ஜே.வி.பி.யினரின் (மக்கள் விடுதலை முன்னணியின்) ஆயுதக்கிளர்ச்சியை அடக்கி ஒடுக்கவென நடத்திச்செல்லப்பட்டதாக கூறப்படும் "பட்டலந்த வதை முகாம்" தொடர்பான "பட்டலந்த அறிக்கை" இலங்கையில் மீண்டும் ஒரு பரபரப்பையும் பதற்றத்தையும் பரிதவிப்புக்களையும் சிங்களக் கட்சிகளிடையில் கலக்கத்தையும் ஏற்படுத்தி விட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவில் கிரிபத்கொட - பியகம வீதியின் சந்தியிலிருந்து தெற்காக சுமார் 2 கிலோமீற்றர் தொலைவில் உரத்தொழிற்சாலை ஒன்று உள்ள பகுதியிலேயே இந்த பட்டலந்த வதை முகாம் இருந்தது. இந்த பட்டலந்த வதை முகாமில் வைத்தே ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு 70 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதே நேரத்தில் பல்வேறுபட்ட இளைஞர் யுவதிகள் சித்திரவதை செய்யப்படுவதை இந்த வதை முகாமின் சூத்திரதாரியெனக் குற்றம்சாட்டப்படும் அப்போதைய அமைச்சரான ரணில் விக்ரமசிங்க ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

இவ்வாறான நிலையில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1995 ஆம் ஆண்டு பிறப்பித்த உத்தரவுக்கு அமைய பட்டலந்த விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டதையடுத்து 1988, 1989 ஆம் ஆண்டுகளில் பட்டலந்த உரத்தொழிற்சாலையில் அமைந்துள்ள வீட்டுத்தொகுதியில் நடத்திச்செல்லப்பட்ட வதைமுகாம் தொடர்பில் பல தகவல்கள் அம்பலமாகின .சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு உயிர் தப்பியவர்கள் தாம் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட வீடுகளை ஆணைக்குழு முன்னிலையில் அடையாளப்படுத்தினர்.

இவ்வாறு சித்திரவதைகளுக்கும் படுகொலைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட வீடுகள் அப்போதைய அமைச்சரான ரணில் விக்ரமசிங்கவின் நேரடி பொறுப்பிலேயே இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. வீட்டுத் தொகுதியின் A2/2 வீட்டை 1983 முதல் 1989 வரை ரணில் விக்கிரமசிங்க இளைஞர் விவகார மற்றும் தொழில்வாய்ப்புக்கள் அமைச்சின் சுற்றுலா பங்களாவாக பயன்படுத்தியிருந்தார். பின்னர் 1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 1994 ஆம் ஆண்டு வரை அதேவீட்டை கைத்தொழில் அமைச்சரான தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்தினார். A2/1 வீடு ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் A2/3 வீடு ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இருந்த அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

A1/7 வீட்டையும் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பயன்படுத்தியிருந்ததுடன் B2 வீட்டையும் ரணில் விக்கிரமசிங்க தமது அலுவலகமாக பயன்படுத்தியிருந்தார். இந்த வீட்டில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு தப்பிச் சென்ற ஒருவர் ஆணைக்குழு முன்னிலையில் இந்த வீட்டை அடையாளம் காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது B1 வீடும் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு உத்தியோகத்தரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தரான பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுதாத் சந்திரசேகர B7 வீட்டை பயன்படுத்தியிருந்ததாக பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

B8 வீடு குறித்த வீட்டிற்கு அருகில் அமைந்திருந்ததுடன் அதனை பொலிஸ் அத்தியக்சகர் டக்ளஸ் பீரிஸின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பயன்படுத்தியிருந்தனர். குறித்த வீட்டில் தடுத்து வைக்கப்பட்டு தாம் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக ஏல் சுகி பெரேரா என்பவர் பட்டலந்த விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார். இதனைத் தவிர உரிய நடைமுறைக்கு புறம்பாக அமைச்சர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய உத்தரவுக்கு அமைய பொலிஸ் பிரிவொன்றுக்காக மேலும் சில வீடுகள் வழங்கப்பட்டிருந்ததாகவும் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பட்டலந்த வதைமுகாம் படுகொலைகள் பற்றி குற்றத்தடுப்பு பிரிவினராலும், ஜனாதிபதி ஆணைக் குழு வினராலும் ரணில் விக்ரமசிங்க விசாரணை செய்யப்பட்டிருந்தார், ஆனால் அந்த விசாரணை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவும் இல்லை. அதன் பரிந்துரைகள் வெளிப்படுத்தப்படவும் இல்லை. அறிக்கை சந்திரிகா அரசினால் இருட்டடிப்பு செய்யப்பட்டது. இவ்வாறான நிலையில். பட்டலந்த வதைமுகாம் சித்திரவதைகள், படுகொலைகளை, அதுதொடர் பிலான ஆணைக்குழு அறிக்கையினை மக்களும் நாடும் மறந்து விட்டனர்.

இவ்வாறான நிலையில்தான் கடந்த 06-03--2025 அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு முன்னாள் ஜனாதிபதியும் பட்டலந்த வதைமுகாம் சூத்திரதாரியென குற்றம்சாட்டப்படுபவருமான ரணில் விக்ரமசிங்க வழங்கிய பேட்டியும் அதில் ஜே.வி.பி. ஆயுத கிளர்ச்சியாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை, மற்றும் படுகொலை பற்றிய கேள்விக்கு அவர் கூறிய பதில்களும் மீண்டும் பட்டலந்த வதைமுகாமை மக்கள் முன் கொண்டு வந்துள்ளதுடன் அரசியலிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் வெளிப்பாடாக அப்போது ஆயுத கிளர்ச்சியாளர்களாகவிருந்தவர்களும் தற்போது ஆட்சியாளர்களாகவுள்ளவர்களுமான ஜே.வி.பி.யினர். அந்த பட்டலந்தை வதைமுகாம் தொடர்பான அறிக்கையை 25 வருடங்களின் பின்னர் தூசு தட்டி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளதுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டம் பாயும் எனவும் அறிவித்துள்ளனர்.

அதேவேளை பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 16 ஆம் திகதி விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில முழுமையான அரசியல் அவதூறு பிரசாரத்தை நோக்கமாகக் கொண்டு பட்டலந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. அறிக்கையின் முடிவுகளில், ஒரு அமைச்சராக, பொலிஸ் கண்காணிப்பாளர் மூலம் பொலிஸ ாருக்கு வீட்டுவசதி வழங்குவது எனக்குச் சரியாக இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வீடுகளை ஐ.ஜி.பியிடம் ஒப்படைத்து, அவர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே சரியான முறையாக இருக்க வேண்டும். இந்தச் செயலுக்கு நளின் டெல்கோடாவும் நானும் மறைமுகமாகப் பொறுப்பு என்று ஆணைய அறிக்கை கூறுகிறது.

ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற விடயங்கள் எதுவும் எனக்குப் பொருந்தாது. 1988 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஜே.வி.பி. மேற்கொண்ட ஏராளமான பயங்கரவாதச் செயல்கள் தொடர்பான முடிவுகள் மற்றும் அவதானிப்புகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளன. பின்னணியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணைக்குழு அறிக்கையின் மூன்றாவது அத்தியாயம், ஜே.வி.பி. செய்த கொடூரமான பயங்கரவாதச் செயல்களை விரிவாக விவரிக்கிறது. முழு வரலாறும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றைத் தவிர, வேறு எந்த குற்றச்சாட்டுகளும் எனக்குப் பொருந்தாது. அந்த அறிக்கையை நான் முழுமையாக நிராகரிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

இந்த பட்டலந்த வதை முகாம் செயற்பட்ட காலத்தில் ஜனாதிபதியாகவிருந்தவர் தற்போதைய எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவின் தந்தை ரணசிங்க பிரேமதாச. ஜே.வி.பி.யினரை ஈவிரக்கமின்று கொன்று ஆறுகளில் வீசியதில் பிரசித்தமானவர். பட்டலந்த வதைமுகாமை நடத்தியவர் அப்போதைய அமைச்சரும் தற்போதைய ஐக்கியதேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. அந்த வதைமுகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆயுத கிளர்ச்சியில் ஈடுபட்டு பல்லாயிரக்கணக்கானோரை படுகொலை செய்த தற்போதைய ஆட்சியாளர்களான ஜே.வி.பி.யினர். பட்டலந்த அறிக்கையை தயாரிக்க உத்தரவிட்ட அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவினரின் கட்சியினரும் இந்த ஜே.வி.பி.யினரால் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறானநிலையில்தான் பட்டலந்த வதைமுகாம் பற்றிய பட்டலந்த அறிக்கையை ஆட்சியாளர்களான ஜே.வி.பி.யினர் தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதுடன் அதில் சம்பந்தப்பட்டோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனக்கூறியுள்ளதுடன் பட்டலந்த வதைமுகாம் அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த இரு நாட்களை ஒதுக்கியுள்ளதுடன் அதில் முதல் நாளை ஏப்ரல் 10 ஆம் திகதி எனவும் அறிவித்துள்ளனர். ஆக பட்டலந்த வதைமுகாமுடன் மட்டுமன்றி பல்லாயிரக்கணக்கான படுகொலைகளுடன் தொடர்புபட்ட அனைத்துப் புள்ளிகளும் தற்போது பாராளுமன்றம் என்ற ஓரிடத்தில் சந்தித்துள்ள நிலையில் பட்டலந்த வதைமுகாம் படுகொலைகளைப் பற்றி மட்டுமல்லாது இன்னும் பல படுகொலைகளும் வெளிச்சத்திற்கு வரப்போகின்றன.


இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே, பட்டலந்த கொலைக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மட்டுமல்ல, மாத்தளை படுகொலைகளுக்கு கோத்தபாய ராஜபக்சவிடமும் விசாரணைகள் தொடங்கப்பட வேண்டும் என முன்னணி சோசலிசக் கட்சியின் புபுது ஜெயகொட கூறியுள்ளார். பட்டலந்தவில் கொன்ற ரணில் விக்ரமசிங்கவை மட்டுமல்ல, மாத்தளை விஜய வித்யாலயாவில் நடந்த கூட்டுப் புதைகுழிக்கு பொறுப்பானவரும், அப்போது மாத்தளை இராணுவத்தின் தளபதியாக இருந்தவருமான கோத்தபாய ராஜபக்சவையும் கைது செய்யவேண்டும் எனக்கூறியுள்ளார்.

சிறீலங்கா மஹஜன கட்சியின் ஸ்தாபகரும், பிரபல நடிகரும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கணவருமான விஜேயகுமாரதுங்கவின் படுகொலை குறித்த அறிக்கையும் பட்டலந்த அறிக்கைபோன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென சாமர சம்பத் தசநாயக்க எம்.பி.வலியுறுத்தியுள்ளார். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையுடன் மேலும் சில ஆணைக்குழு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்படும். 1989 காலக்கட்டத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் 16 பேரும், கட்சி ஆதரவாளர்கள் 630 பேரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். சுதந்திரக் கட்சியின் சுமார் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இந்தக் கொலைகள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(தொடர்ச்சி 17 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1138

## (வரலாறும் மரபும்)

## கதிஉகாமம் முத்துலிங்கசுவாமி கோயில்

### (சிவன்கோயில்) கதிஉகாமம்

*" எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுளென்றேத்தி*
*சிந்தை செய்பவர்க்கல்லால் சென்றுகை கூடுவதன்றால்*
*கந்தமாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்*
*அந்தண்சோலை நெல்வாயி லரத்துறை அடிகடமருளே. "*

மாணிக்ககங்கையின் மறுகரையில் இஸ்லாமியர்களின் வழிபாட்டுத்தலமான பள்ளிவாசல் காணப்படுகின்றது. பள்ளிவாசலிலிருந்து சற்றுத் தூரத்தில், விபீஷணரின் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் ஸ்ரீஇராமர், சீதை, இலட்சுமணர், அனுமார் ஆகியோரின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. இவை தவிர சிவன்கோயில், பார்வதிகோயில், பத்துஅவதாரங்களைக் குறிப்பிடும் தசாவதாரக் கோயில், வள்ளி கோயில், வள்ளி தெய்வயானை ஆகியோரோடு எழுந்தருளியுள்ள முருகன் கோயில் இலட்சுமி நாராயணர் கோயில், அஞ்சநேயர் கோயில், புத்தர்கோயில், கண்ணகிகோயில் ஆகியவையும் சிறு கோயில்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் பௌத்த மதத்தைச் சார்ந்த சிங்கள மக்களே நிர்வகித்து வருகின்றனர்.

கதிர்காமம் முருகன் கோயில் செப்பேடு வேய்ந்த சிறிய கோயிலாகவே காணப்படுகின்றது. இக்கோயிலில் நடைபெறும் வழிபாட்டுமுறைகள், ஏனைய கோயில்களில் இடம்பெறும் முறைகளினின்றும் வேறுபட்டுள்ளது. இங்குள்ள ஆலயத்தின் கருவறையில் விக்கிரக அமைப்பு கிடையாது. அருவுருவ வழிபாடே நடைபெறுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள கந்தப்பெருமான் ஒளிவடிவிலேயே வணங்கப்படுகின்றார். கோயிலின் முன்வாயிலிலிருந்து அடுக்கடுக்காக ஏழுதிரைகள் தொங்குகின்றன. இந்த ஏழு திரைகளுக்கும் தத்துவ விளக்கமுண்டு. நமது ஊனுடம்பு ஆறு ஆதாரங்களைக் கொண்டுள்ளது. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என அழைக்கப்படும். இந்த ஆறு ஆதாரங்களையும் ஆறுதிரைகள் குறிப்பதாகவும், ஏழாவது திரை துவாதசாந்தமாகிய ஒளித்திரை என்றும் இவற்றைக் கடந்து சென்றால், தேவ இரகசியத்தை ஆத்மார்த்தமாக அனுபவிக்க முடியும் என்றும் ஆன்றோர் பூசகர்கள் மட்டுமே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர். திரைக்குப் பின்னால் ஒரு பேழையில் ஒரு இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தை பக்தர்கள் பார்க்க முடியாது. திரைக்குப் பின்னாலுள்ள மரகத வேலுக்கு பூசை ஆராதனைகள் இடம்பெறும். கபராளை என்று அழைக்கப்படும் வேடமரபனரே, வாயைத் துணியால் கட்டி, மௌனபூசை செய்கின்றனர். மௌனபூசை அன்பு நெறியை ஆதாரமாகக்கொண்டது.

வரலாற்றுப் பெருமைமிக்க கதிர்காமத்தில் அமைந்துள்ள சிவாலயம், முத்துலிங்கசுவாமி கோயில் என்றும் சிவன்கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது. சிவனே முழுமுதற்தெய்வம் என உணர்ந்த முத்துலிங்கசுவாமிகள், கதிர்காமத்தில் முருகன் எழுந்தருளியுள்ள இடத்திற்கு அண்மையிலேயே சிவனுக்கென ஆலயமொன்றினையும் அமைத்துள்ளார்.

புராண இதிகாச வரலாற்றுப் பெருமை கொண்ட கதிர்காமம், சுவாமி கல்யாணகிரி என்ற முத்துலிங்கசுவாமிகளின் அனுபூதி பெற்ற பின்னரே கதிர்காமம் முருகன் ஆலயம், அருள்பெற்ற தலமாக சிறப்புப்பெற்றது. இவர் கி.பி 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். பல்லாண்டு காலமாக மறைந்திருந்த இவ்வாலயத்தை இவரே கண்டுபிடித்தாரென்பர். வடநாட்டைச்சேர்ந்த சுவாமி கல்யாணகிரி (முத்துலிங்கசுவாமிகள்) கதிர்காமத்திலே பன்னிரண்டு ஆண்டுகள் தங்கி கடுந்தவம் புரிந்துள்ளார். இவர் தவம் செய்த காலத்திலே ஒரு வேடுவச் சிறுவ-னும், சிறுமியும் சுவாமிகளுக்கு பணிவிடை செய்துள்ளனர். முருகனே இவ்வாறு பணிவிடைசெய்தாரென உணர்ந்த சுவாமிகள் முருகனைப் போற்றியுள்ளார்.

வரலாற்றுப் பெருமைமிக்க கதிர்காமத்தில் அமைந்துள்ள சிவாலயம், முத்துலிங்கசுவாமி கோயில் என்றும் சிவன்கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது. சிவனே முழுமுதற்தெய்வம் என உணர்ந்த முத்துலிங்கசுவாமிகள், கதிர்காமத்தில் முருகன் எழுந்தருளியுள்ள இடத்திற்கு அண்மையிலேயே சிவனுக்கென ஆலயமொன்றினையும் அமைத்துள்ளார்.

புராண இதிகாச வரலாற்றுப் பெருமை கொண்ட கதிர்காமம், சுவாமி கல்யாணகிரி என்ற முத்துலிங்கசுவாமிகளின் அனுபூதி பெற்ற பின்னரே கதிர்க-ாமம் முருகன் ஆலயம், அருள்பெற்ற தலமாக சிறப்புப்பெற்றது. இவர் கி.பி 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். பல்லாண்டு காலமாக மறைந்திருந்த இவ்வாலயத்தை இவரே கண்டுபிடித்தாரென்பர். வடநாட்டைச்சேர்ந்த சுவாமி கல்யாணகிரி (முத்துலிங்கசுவாமிகள்) கதிர்காமத்திலே பன்னிரண்டு ஆண்டுகள் தங்கி கடுந்தவம் புரிந்துள்ளார். இவர் தவம் செய்த காலத்திலே ஒரு வேடுவச் சிறுவனும், சிறுமியும் சுவாமிகளுக்கு பணிவிடை செய்துள்ளனர். முருகனே இவ்வாறு பணிவிடைசெய்தாரென உணர்ந்த சுவாமிகள் முருகனைப் போற்றியுள்ளார்.

முத்துலிங்க சுவாமிகள் தாம் அனுபூதிமூலம் பெற்ற செல்வத்தை சமாதி அடைவதற்கு முன்பாக, தங்கத் தகட்டில் இயந்திரமாகப் பதிப்பித்து, பிரதி'டை செய்தார். இவ்வியந்திரம் கதிர்காமத்தில் முருகப்பெருமானின் கருவறையிலே பேழை-யினுள் வைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் சக்தி வாய்ந்தது. இக்காரணத்தினாலேயே இக்கோயில் அருளொளி வீசும் தலமாக என்றும் விளங்குகின்றது. அன்னியராட்சியில் கதிர்காமமும் தாக்குதலுக்கு உட்பட்டவேளையில், இறையருளால் அவர்கள் பிடியில் சிக்காது தப்பித்தமைக்கு இவ்வாறான இறையருளும் ஒரு காரணமாகக் கருதப்படுகின்றது. சிவ பக்தராகவும், ஞானியானவும், சித்தராகவும் விளங்கிய முத்துலிங்கசுவாமிகளின் சமாதி, முருகன் ஆலயத்திற்கு அருகாமையிலேயே உள்ளது. முத்துலிங்கசுவாமிகளுக்குப் பின் இவரது சீடர், ஸ்ரீ ஜயங்கிரிசுவாமிகள், கதிர்காமகந்தனுக்குச் சேவை செய்தார். இவரின் பின் குடிபாவா என்பவரும் கதிர்காமக்கந்தனுக்குச் சேவை செய்து, கி.பி 1898 இல் சமாதியடைந்தார்.

**வளரும்...**




*(16 பக்கத் தொடர்ச்சி)*



*பிரேமதாச யுகத்தை நினைவு கூர்வதாக இருந்தால், கண்டி மாவட்டத்தில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் படுகொலை செய்யப்பட்டதை மறக்க முடியாது. பட்டலந்த வதை முகாமிற்கும் சென்றவர்கள் இன்றும் இத் தொகுதியில் இருக்கின்றார்கள். 22 பல்கலைக்கழக மருத்துவ பீடமாணவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். 157 பேரை கண்டி மஹவத்த பகுதியில் படுகொலை செய்தார்கள். இதில் பிரேமதாச அரசாங்கத்தினால் 127 பேர் கொல்லப்பட்டனர். 28 பேரை ஜே.வி.பி கொலை செய்தது. கடுகண்ணாவ மற்றும் ரந்தெனிகலவில் வதைமுகாம் கள் இருந்தன. அஸ்கிரிய பொலிஸ் உத்தியோகபூர்வ இல்லத்திலும் ஒரு வதை முகாம் காணப்பட்டது. குண்டசாலை, கடுகஸ்தோட்ட தெல்வத்த உள்ளிட்ட பல வதை முகாம்கள் இம்மாவட்டத்தில் காணப்பட்டன. 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மகாவலி கங்கையில் கொலை செய்து வீசப்பட்டமையும் மறந்துவிட முடியாது. இதுவே 88, 89 வரலாறு என்று 2020 ஆம் ஆண்டு ஒரு பிரசார மேடையில் அப்போதைய பிரதமரான மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்திருந்தார்.*

*ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலரும் தற்போதய எம்.பி.யுமான தயாசிறி ஜயசேகர, பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் இப்போது கதைக்கும் ே ஜ.வி.பி.யினர் கடந்த காலங்களில் சந்திரிகா அரசாங்கம், ராஜபக்ஷ அரசாங்கம் ஆகியவற்றில் பங்காளிகளாக இருந்துள்ளார்கள் அப்போது அதுபற்றி கதைக்கவில்லை. அத்துடன் தற்போது இவர்கள் சித்திரவதைக்காரர் என்று குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்கவுடனேயே 2015இல் அரசாங்கத்தை அமைத்தார்கள். அப்படியிருக்கும்போது ஏன் இவர்கள் பட்டலந்த அறிக்கையை பாராளுமறைத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென அந்த அரசுகளை வலியுறுத்தவில்லை?ஆகவே தற்போது ஜே.வி.பி.யினர் பட்டலந்த தொடர்பில் பேசுவது ,பட்டலந்த அறிக்கையை சபையில் சமர்ப் பித்துள்ளமை அரசியலுக்காகவா? அப்படியில்லையெனில் பட்டலந்தவில் மட்டுமல்ல 46 இடங்களில் சித்திரவதை முகாம்கள் இருந்துள்ளன. அவை தொடர்பிலும்* ஆணைக்குழுக்களை அமைக்க வேண்டும், அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

எனவே நாட்டை ஆட்சி செய்த அரசுகள், ஜனாதிபதிகள், பிரதமர்கள், அமைச்சர்கள், ஜே.வி.பி.யினர் செய்த படுகொலைகள் எல்லாமே இனி மீண்டும் கிளறப்படப்போகின்றன. பட்டலந்தை அறிக்கைதொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் ஆரம்பமாகும் போது ஒவ்வொரு கட்சியினரும் மற்றையவர்கள் செய்த படுகொலைகளை அம்பலப்படுத்தப்போகின்றனர். இதில் தற்போதய ஆட்சியாளர்களான ஜே.வி.பி.யினர் செய்த படுகொலைகள் அம்பலத்துக்கு வரும்போது ஆட்சியாளர்களாக அவர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். இதனால் பட்டலந்த அறிக்கையை அவசரப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது விட்டோமோ என ஜே.வி.பி.யினர் கையை பிசைய ஆரம்பித்துள்ளனர். அதனால் தான் வீராப்பு பேசி விட்டோம், புலி வாலைப் பிடித்துவிட்டோம் இனி அதனை விட்டால் தமக்கு ஆபத்து என்பதனால்தான் ஏப்ரல் 10 ஆம் திகதி ஒரு நாள் விவாதத்தைநடத்தி விட்டு அடுத்த நாள் விவாதம் மே மாதத்தில் என திகதி குறிப்பிடாது ஒத்திவைத்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையின் இருட்டறைக்குள் கிடந்த "பட்டலந்த அறிக்கை"க்கு அல்ஜசீரா தொலைக்காட்சி வெளிச்சம் பாச்சியதால் அன்றைய ஆட்சியாளர்களின் முகங்கள் முதல் இன்றைய ஆட்சியாளர்களின் முகங்கள் வரை இருண்டுபோயுள்ளன. பட்டலந்தவில் சித்திரவதைப்பட்டது, படுகொலைசெய்யப்பட்டது நம்மவர்கள்தானே. அதனால் இந்த அறிக்கையை அம்பலப்படுத்துவதன் மூலம் மக்களின் அனுதாபத்தையும் அரசியல் இலாபத்தையும் பெறலாம் என ஜே.வி.பி.யினர் தப்புக்கணக்குபோட்டுவிட்டனர். அல்ஜசீரா தொலைக்காட்சி காட்டிய குளவிக்கூட்டை அரசியல் தந்திரம் தெரியாது ஜே.வி.பி.யினர் கலைத்து விட்டதனால் இன்று அவர்கள் உட்பட பிரதான சிங்களக்கட்சிகள் வரை தங்களின் கோர முகம் வெளிப்படப்போகின்றதேயென கலங்கிப்போயுள்ளன.

அதேவேளை பட்டலந்த அறிக்கை விவாதத்திற்கு வரும்போது தமிழர் தரப்புக்கள் பேரினவாத அரசுகளின் தமிழினப் படுகொலைகளையும் தமிழ் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளையும் இராணுவத்தின் சித்திரவதை முகாம்களையும் படைகளினால் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் பட்டியலிட்டு மீண்டும் உரத்துக் குரலெழுப்பப் போகின்றனர். எனவே இந்த "பட்டலந்த அறிக்கை" சிங்கள ஆட்சியாளர்களினதும் ஜே.வி.பி.யினரினதும் இலங்கைப்படைகளினதும் கொடூர முகத்தை மீண்டும் ஒருதடவை வெளிச்சம் போட்டுக் காட்டப் போகின்றது.

# மன்னாரில் திருடப்பட்ட பல இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான நகைகள் மீட்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

## மன்னார் பொலிஸாரினால் மூவர் கைது



- எஸ்.ஆர்.லெம்பேட் (15-03-2025)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் கடந்த சிவராத்திரி தினத்தன்று இரவு திருடப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மன்னார் பொலிஸாரால் 15ம் திகதி அன்றையதினம் சனிக்கிழமை மீட்கப்பட்டதுடன் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் குறித்த திருட்டு சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயதிலக்க வின் பணிப்புரைக்கு அமைவாக குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி மகேஷ் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட தேடுதல் மற்றும் விசாரணைகளின் போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.



கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து சுமார் 28 லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் சாந்திபுரம் மற்றும் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த 28,29,33 வயதுடைய நபர்கள் என தெரிய வந்துள்ளது.கைது செய்யப்பட்ட மூவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குரு முதல்வராக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் நியமனம்

- எஸ்.ஆர்.லெம்பேட் (15-03-2025)

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குரு முதல்வராக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இந்த நியமனத்தை வழங்கினார்.

மடு திருப்பதியில் ஐந்து நாட்கள் நடைபெற்ற மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானத்தின் நிறைவில் 14.03.2025 அன்று வெள்ளிக்கிழமை இந்த நியமனம் அறிவிக்கப்பட்டது.

ஒரு மறைமாவட்டத்தில் குரு முதல்வர் பதவி என்பது மறைமாவட்ட ஆயருக்கு அடுத்த நிலையில் உள்ள உயர் பதவியாகும்.

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக நியமிக்கப்பட்டுள்ள அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் மன்னார் மாவட்டத்தின் முருங்கன் கிராமத்தில் காலம்சென்ற திரு.திருமதி. சந்தான் பாவிலு தம்பதியருக்கு பதினொராவது மகனாக 1969ஆம் ஆண்டு பிறந்தார்.

முருங்கன் மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும், யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியையும் கற்றார்.

யாழ்ப்பாணம் புனித மாட்டினார் சிறிய குருமடத்தில் தனது ஆரம்ப குருத்துவ உருவாக்கத்தைப் பெற்ற இவர், தனது மூன்று வருட மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும், நான்கு வருட இறையியல் கல்வியை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் கற்றார்.

1997ஆம் ஆண்டு அன்றைய மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையினால் மன்னார் மறைமாவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

வங்காலை, மன்னார் ஆகிய பங்குகளில் உதவி பங்குத்தந்தை யாகவும், தலைமன்னாரில் பங்குத்தந்தையாக மூன்று வருடங்களும் பணியாற்றினார்.

தொடர்ந்து மன்னார் மறை கல்வி இயக்குனராக ஐந்து வருடங்களும், கலையருவி எனப்படும் சமூகத்தொடர்பாடல் அருட்பணி மைய இயக்குனராக ஏழு வருடங்களும், மன்னார் மறைமாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் சர்வமத உரையாடல் ஆணைக்குழுவின் இயக்குனராக ஒன்பது வருடங்களும், “மன்னா” என்ற மறைமாவட்டப் பத்திரிகையின் ஆசிரியராக 16 வருடங்களும், மன்னார் சிறிய குருமட அதிபராக ஐந்து வருடங்களும், மன்னார் மறைமாவட்ட செனட் சபையின் செயலாளராக ஐந்து வருடங்களும் பணியாற்றினார்.

தற்போது தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி திருத்தலத்தின் பரிபாலகராகவும், தோட்டவெளி பங்கு தந்தையாகவும், மன்னார் மறைக்கோட்ட முதல்வராகவும் பணியாற்றிக்கொண்டிருந்த நிலையில் இந்தப் புதிய பணிப்பொறுப்பு அடிகளாருக்கு வழங்கப்பட்டுள்ளது.



தமிழ் நேசன் அடிகளார் சிறந்த கல்வித் தகைமை கொண்டவராக விளங்குகின்றார். ரோமாபுரியில் உள்ள ஊர் பானியா பல்கலைக்கழகத்தில் மெய்யியல் மாணிப் பட்டத்தையும் இறையியல் மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் எம்.ஏ. பட்டத்தையும் கிறிஸ்தவ நாகரீகத்தில் எம். பில். பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தற்போது கண்டி பெரதெனியா பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் கலாநிதிப் பட்டத்தை நிறைவு செய்யும் நிலையில் உள்ளார்.

சிறந்த தமிழ் அறிஞராக திகழும் தமிழ் நேசன் அடிகளார் பத்துக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார்.

பல தேசிய, சர்வதேச தமிழ் மாநாடுகளில் பங்கேற்றுள்ளார். பல்வேறு நாடுகளில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். 2009 ஆம் ஆண்டு மன்னாரில் மன்னார் தமிழ்ச் சங்கத்தை நிறுவி அதன் தலைவராக இரண்டு தடவைகள் பணியாற்றியுள்ளார்.

2010ஆம் ஆண்டு நான்கு நாள் மன்னார் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையும், 2013ஆம் ஆண்டு மூன்று நாள் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவையும் மன்னாரில் பிரமாண்டமாக நடாத்தி தேசிய சர்வதேச கவனத்தைப் பெற்றுக்கொண்டார்.

இந்த இரண்டு மாநாடுகளும் அடிகளாரின் செயற்திறனை வெளிப்படுத்திய இருபெரும் நிகழ்வுகளாகும்.

அடிகளாரின் தந்தை திரு. சந்தான் பாவிலு அவர்களும். அவருடைய தந்தை திரு. மரியான் சந்தான் அவர்களும் பல கத்தோலிக்க நாட்டுக் கூத்து நாடகங்களை எழுதிய புலவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் முதுபெரும் தமிழ் அறிஞர்களான நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் மற்றும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் வழியில் தமிழ் பணி புரியும் அடிகளார் தொடர்ந்து எழுதியும், தமிழ் மாநாடுகளில் பங்கெடுத்தும் வருகின்றார்.

சமயப் பணியையும், தமிழ்ப் பணியையும் தனது இரு கண்களாகக் கொண்டு இடையறாது பணியாற்றும் அடிகளாரின் திறமையையும் செயற்திறனையும் அங்கீகரிக்கும் முகமாக மன்னார் மறைமாவட்ட திருச்சபை மறைமாவட்ட குருமுதல்வர் பணிப்பொறுப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நிறைவு



- எஸ்.ஆர்.லெம்பேட் (20-03-2025)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் 20ம் திகதி அன்று வியாழக்கிழமை மதியம் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் பொலிஸ் பாதுகாப்புடன் வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டன.

இந்நிலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வியாழக்கிழமை (20) மன்னார் மாவட்டச் செயலகத்தில் வேட்பு மனுவை கையளித்துள்ளனர்.

கட்சியின் மாவட்ட இணைப்பாளர் என்.எம்.முனவ்பர் தலைமையில் மன்னார் நகரசபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களை கையளித்துள்ளனர்.

இதேவேளை கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வேட்பு மனுவை கையளித்துள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் மன்னார் நகர சபை,மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய இரு சபைகளிலும் போட்டியிட வேட்பு மனுவை கையளித்துள்ளனர்.

இதேவேளை தேசிய மக்கள் சக்தி வியாழன் அன்று வேட்பு மனுவை கையளித்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் தலைமையில் மன்னார் நகர சபை, நானாட்டான்,முசலி,மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களை கையளித்துள்ளனர்.

இதேவேளை மன்னார் நகரசபை மற்றும் மூன்று பிரதேச சபைகளிலும் போட்டியிட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையிலான சிறிலங்கா தொழிலாளர் கட்சி சார்பாக 20ம் திகதி அன்றைய தினம் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் மாவட்ட இணைப்பாளர் அபூபக்கர் தர்சின் தலைமையிலான குழுவினர் இவ்வாறு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட20ம் திகதி அன்றைய தினம் வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளனர்.



வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தலைமையில் மன்னார் நகர சபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்களாக 4 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# கிழக்கில் பிள்ளையான் வியாழேந்திரன் தலைமையில் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு உதயம்

## சிங்களவர்களுக்கு மாத்திரமல்ல தமிழர்களுக்கும் பாதகமான "கூட்டு" இது என கிழக்கிலங்கையில் விமர்சனம்



"கிழக்கு தமிழர் கூட்டமைப்பு" எனும் புதிய கூட்டமைப்பு பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினரும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு கைச்சாத்திடும் நிகழ்வு 15ம் திகதி அன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் மட்டக்களப்பு ரிவேரா விடுதியில் இடம் பெற்றுள்ளது.

கிழக்குத் தமிழர்களின் வளர்ச்சியையும் சுபிட்ஷத்தையும் கருத்தில் கொண்டு




பல்லின சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் வண்ணம் பலமிக்க அரசியல் சக்தி ஒன்றினை கட்டமைக்கும் முயற்சியில் "கிழக்கு தமிழர் கூட்டமைப்பு" எனும் புதிய கூட்டமைப்பு இன்று உதயமானது.

இதன் முதற்கட்டமாக ர சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சிக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு கைச்சாத்திட்டனர்.

இந்த ஒற்றுமைக்கான பயணத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்கை அடிப்டையாகக் கொண்டு இயங்கும் அரசியல் சக்திகள் அனைவரையும் ஒன்றிணைத்து போட்டியிட உள்ளதோடு எதிர்காலத்தில் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளையும் சிவில் சமூக ஆர்வலர்களையும் ஒன்றிணைத்து அதனுடாக எதிர்காலத்தில் கிழக்குத் தமிழர்களின் அரசியல், சமூக பாதுகாப்பு அரணாக பலம்பொருந்திய கட்டமைப்பாக இது செயல்படவுள்ளது என தெரிவித்தனர்.

இதேவேளை இந்த செய்தி வெளியான சில மணிநேரங்களில் "சிங்களவர்களுக்கு மாத்திரமல்ல தமிழர்களுக்கும் பாதகமான "கூட்டு" இது" என கிழக்கிலங்கையில் விமர்சனங்கள் எழுந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் நடைபெற்ற கவிமகள் ஜெயவதியின் "எழுத்துக்களோடு பேசுகிறேன்" கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா



கவிமகள் ஜெயவதியின் எழுத்துக்களோடு பேசுகிறேன் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா மட்டக்களப்பில் தமிழ் சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் கடந்த 13ம் திகதி வியாழக்கிழமை வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி கலந்து கொண்டு முதல் நூலை பெற்று அதனை வெளியீட்டுவைத்தார்.



மங்கள விளக்கேற்றலோடு ஆரம்பிக்கப்பட்டு EPAND அமைப்பின் சிறுவர் கழக உறுப்பினரான நிகேஷ் தமிழ்மொழி வாழ்த்தினை தொடர்ந்து வரவேற்பு நடனமானது இடம்பெற்றது இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து கதிரவன் கலை கழகத்தினுடைய தலைவர் கதிரவன் இன்பராசா அறிமுக உரையினையடுத்து சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்கு பல் க லை க் க ழ க த் தி ன் முதுநிலை விரிவுரையா-ளர் திரு.க.மோகனதாசன் நயவுரையாற்றினர்.

மகரகம தேசிய கல்வி நிறுவகம் தமிழ்மொழி துறை பணிப்பாளர் கலாநிதி முருகு தயாநிதி, மட்டக்களப்பு உயர்தொழில்நுட்ப கல்லூரியினுடைய பணிப்பாளர் செல்வரத்தினம் ஜெயபாலன் ஆகியோர்களின் அதிதிகளாக கலந்துகொண்டு உரையாற்றினர்.

அதனை தொடர்ந்து நூலாசிரியர் கவிமகள் ஜெயவதி ஏற்புரை இடம் பெற்றதை தொடர்ந்து EPAND அமைப்பினர்களாலும் கதிரவன் கலைக்கழக உறுப்பினர்களாலும் தமிழ் சங்கத்தின் உறுப்பினர்களாலும் நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டது.

தொடர்ச்சியாக வருகை தந்த கஜலுனுர்களுக்கு நூலாசிரியரின் கரங்களால் நூல் பிரதிகள் வழங்கப்பட்டு சுகுணதாஸ் சசிகுமார் நன்றியுரையுடன் நிகழ்வானது இனிதே நிறைவடைந்தது.

# வியாழேந்திரன் பிள்ளையான் "கூட்டு" மக்களை குழிதோண்டி புதைப்பதற்கான ஒன்று மக்கள் விழிப்படைய வேண்டும் என்கிறார் சுயேச்சைக்குழு வேட்பாளர் விமலசேன லவக்குமார்







விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிள்ளையான், கருணா பிரிந்த பின்னர் தான் அதி-கமான தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அதேவேளை எஸ்.வியாழேந்திரன். பிள்ளையான் கூட்டு மக்களை குழிதோண்டி புதைப்பதற்கே இவர்கள் எப்போதும் மக்களுக்கு நன்மை செய்யபோவர்கள் அல்ல மக்கள் தெளிவாக விழிப்படைய வேண்டும் என சமூக செயற்பாட்டாளரும் சுயேச்சைக்குழுவாக தேர்தலில் போட்டியிடும் விமலசேன லவக்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபையில் சுயேச்சைக்குழுவில் போட்டி யிடுவதற்கா புதன்கிழமை 19-03-2025 அன்று மட்டக்களப்பு பழையகச்சேரியில் வேட்புமனுதாக்கல் செய்தபின்னர் ஊடகங்களுக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோறளைப்பற்று பிரதேச சபையில் 14 வட்டாரத்திலும் போட்டியிடுவதற்காக வேட்பாளர்களை எனது தலைமையில் களமிறக்கியுள்ளேன். கிராமங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ளும் ஒரு தேர்தல் இதில் வெற்றிபெறும் வேட்பாளர் 900 மீற்றருக்குள் இருக்கின்ற ஒரு வீ-தியை புனரமைக்க முடியும் குறிப்பாக பிரதேச சபை எல்லைக்குள் உள்ள அடிப்படை தேவைகளை செய்து முடிக்கமுடியும்.

அப்படிச் செய்வோம் இப்படிச் செய்வோம் என பிரச்சாரங்களை செய்வார்கள் இந்த காலங்களில் துரஸ்டவசமாக ஒட்டுக்குழுக்களாகவும் பயங்கரவாத கழுக்களாகவும் செயற்பட்டு பல கொலைகளை செய்த குழுக்கள் இந்த தேர்தல் காலத்தில் ஒன்றாக இணைந்துள்ளனர்.

பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் தொடர்பாகவும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தொடர்பாகவும் பல விமர்சனங்கள் உண்டு இவர்கள் எல்லாம் மக்களை குழிதோண்டி புதைப்பதற்கே இந்தமுறை போட்டியிடுகின்றனர்.

எனவே மக்கள் தெளிவாக விழிப்படைய வேண்டும் இவர்கள் மக்களின் இருப்புக்களை சுரண்டி எத்தனையோ உயிர்கள் பறித்தவர்கள் கடந்தகாலத்தில் புலிகள் இருந்தகாலத்தில் பிள்ளையானும் கருணாவும் பிரிந்தபோது தான் அதிகமான தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகளில் இருந்து பிள்ளையான் கருணா பிரிந்தபோதுதான் அதிகமான தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர் மாவட்டத்திலுள்ள அநேகமானவர்கள் பறிகொடுத்து உறவுகளாக, தாய் தந்தைகளாக, சகோதர்களாக இருக்கின்றோம் எனவே மக்கள் விழிப்போடு இந்த தேர்தலில் செயற்படவேண்டும் என்றார்.

### வீணாவின் கவிக்கணை

எத்தனை பேர்
எத்தனை விதமாய்
பேசினாலும் சரி
ஏசினாலும் சரி,
நாம் முன் வைத்த
காலை பின்
வைக்காமல்,
நாம் எதை நோக்கிச்
செல்கின்றோமோ
அதை செம்மையாகச்
செய்து முடித்து,
நாம் யார் என்பதை
நாமறிவதோடு,
உலகிறியவும்
செய்திடலாம்.

# இவ்வார ராசிபலன்

## 21-03-2025 வெள்ளி தொடக்கம் 27-03-2025 வியாழன் வரையும்




**மேஷம்:** உடல்நலத்தில் ஷேமம் கிடைக்கும் வாரம். ஆலய தரிசனம் அமைதியை தரும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய், நொடிகள் அகலும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். விரும்பியது நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். நட்பு வட்டம் விரிவடையும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீக வாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பழைய கடன் அடையும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். பொறுப்புக்கள் சிறப்பு சேரும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 4,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**ரிஷபம்:** கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும் வாரம். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல் நலம் சிறக்கும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். திருமண பாக்கியம் கூடி வரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். செல்வாக்கு உயரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். நவகிரஹ அனுகிரஹம் நன்மை அளிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும். குதூகலம் கூடும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன் கச்சைகள் தீரும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். தேவைகள் பூர்த்தியாகும். தேக பலம் கூடும். தொழில் போட்டி மறையும். புதிய முயற்சிகள் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**மிதுனம்:** மதிநுட்பத்தோடு செயல்படும் வாரம். வியாபாரம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். வம்பு, தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் கைகூடி வரும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து அலைமோதும். புதிய வாய்ப்புக்கள் பயன் தரும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். பயண முயற்சி பலன் தரும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். ஆபத்துக்கள் விலகும். அதிகாரம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதாரம் மேம்படும். தோதான வாழ்வமையும். இல்லம் தேடி வாய்ப்புகள் வரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் மாற்றம் ஏற்படும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு இனிக்கும். ஏற்றமான தருணம் அமையும். தொழில் அபிவிருத்தி உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் வரும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் புரளும். திடீர் பயணம் உற்சாகம்


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

தரும். கர்ம வினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பவானி அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,T




**சிம்மம்:** அதிகார பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஆரோக்யம் சீராகும். தன வரவுகள் பெருகும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவிற்கு வரும். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் அதிகரிக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தொழில் இடமாற்றம் நன்மை தரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றம் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: யானை பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கன்னி:** வரவுகள் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன யோகம் உண்டு. வெற்றியை எட்டும் காலம். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெண்களின் ஆலோசனை ஆதாயம் தரும். இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். குடும்பத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய கடன் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் பணிவு தேவை. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேன்மைகள் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மன நிம்மதி அதிகரிக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் பழி அகலும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L




**துலாம்:** சாதகமான சூழ்நிலைகள் அமையும் வாரம். தொட்டது துலங்கும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ண மயமாகும். உறவினரால் உதவி கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். பணியாட்களின் ஆதரவு பெருகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். தொழிலின் ரகசியம் காப்பாற்றப்படுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டு. தேக ஆரோக்கியம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவில் கவனம் தேவை. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். கலவரமான சூழ்நிலை காணப்படும். போட்டி, பொறாமைகள் விலகும். பாகப்பிரிவினை ஏற்படும். மனை வாங்கும் யோகம் உண்டு. மன நெருக்கடிகள் தீரும். ஊக்கம் அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மருத காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,6,4,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**விருச்சிகம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். பயணம் லாபம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேசப் பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புண்ணியம் சேரும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். வீண் பிரச்சனைகள் அகலும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் பூர்த்தியாகும். வாயில் தேடி வரன் வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும்.

(தொடர்ச்சி 22 பக்கம்)

# மன்னார் மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 38 வேட்பு மனுக்கள் தாக்கல்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (20-03-2025)

மன்னார் மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 38 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

20ம் திகதி அன்று வியாழக்கிழமை மாலை 4.14 மணியளவில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு நான்கு சபைகளுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தது.

மன்னார் நகர சபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்களாக நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ்வாறு வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தது.

கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுயேட்சை குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் உள்ளடங்களாக 45 பேர் கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தனர்.

அவற்றில் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் உள்ளடங்களாக 38 பேருடைய வேட்பு மனுக்கள் எமக்கு கிடைக்க பெற்றிருந்தது.

மன்னார் நகர சபையில் 09 கட்சிகளினதும், ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றது.முசலி பிரதேச சபைக்கு 09 கட்சிகளினதும்,ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றது.

நானாட்டான் பிரதேச சபைக்கு 07 கட்சியினதும் ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றது. மாந்தை மேற்கு பிரதே சபைக்கு 9 கட்சியினதும் ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றது.

முசலி பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 8 வேட்பு மனுக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா தொழிலாளர் கட்சி, சர்வஜனம் அதிகாரம் ஆகிய நான்கு கட்சிகளினதும், சுயேட்சைக்குழு ஒன்று உள்ளடங்களாக 5 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி, மற்றும் சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 2 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான க.கனகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கே.முகுந்தன் அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணத்தில் கைது செய்ய சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடாத்திவிட்டு தப்பிச் சென்ற நபர்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

19ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் யாழில் - தெல்லிப்பழையில், தன்னைக் கைது செய்ய வந்த பொலிஸார் மீது சந்தேகநபர் ஒருவர் தாக்குதல் நடாத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.


இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த சந்தேகநபரை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக தெல்லிப்பழை பொலிஸார் குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்கு சென்றனர்.

இதன்போது குறித்த சந்தேகநபர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்து, பொலிஸார் மீது கொட்டனால் தாக்குதல் நடாத்தியுள்ளார். பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். குறித்த சந்தேகநபரை தேடி தெல்லிப்பழை பொலிஸார் வலைவீசி வருகின்றனர்.

# தலைமன்னார் இராமேஸ்வரம் பயணிகள் கப்பல் போக்குவரத்திற்காக ரூ.6.43 கோடி ரூபா செலவில் புதிய இறங்குதுறை







- ந.லோகதயாளன்

தலைமன்னார் இராமேஸ்வரம் பயணிகள் கப்பல் போக்குவரத்திற்காக ரூ.6.43 கோடி ரூபா (இந்திய நாணயம்) செலவில் புதிய இறங்குதுறை அமைக்கும் ஆரம்ப பணிகள் இந்தியத் தரப்பில் நடைபெற்று வருகிறது.

இலங்கையின் தலைமன்னாரில் இருந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கான கப்பல் போக்குவரத்து 1914ம் ஆண்டு துவங்கப்பட்டது. ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்று வந்த கடல் போக்குவரத்து 1964ல் வீசிய கோரப்புயலின்போது தனுஷ்கோடி நிலைகுலைந்ததால் நிறுத்தப்பட்டது. இதன் பின்பும் மீண்டும் தொடங்கப்பட்ட கப்பல் போக்குவரத்து இலங்கை உள்நாட்டு போர் காரணமாக முழுமையாக நிறுத்தப்பட்டது.

இவ்வாறு நிறுத்தப்பட்ட கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்கும் வகையில் இரு நாடுகளும் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ல் நாகைபட்டினம் காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. இதை தொடர்ந்து ராமேஸ்வரம் தலைமன்னார் இடையே கப்பல் போக்குவரத்திற்கு இந்திய அரசு திட்டமிட்டது.

இதற்காக இந்தியத் தரப்பில் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர், தலைமைச் செயல் அலுவலர் மா.வள்ளலாளர் ஐ.ஏ.எஸ் தலைமையில் அதிகாரிகள் குழுவினர் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டு கப்பல் சேவை மற்றும் சுற்றுலா படகு சவாரி இயங்குவதற்கு பொருத்தமான இடமாக இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடற்கரை, தங்கச்சிமடம் வில்லூண்டி தீர்த்தம், பாம்பன் குந்துகால் துறைமுகம் உள்ளிட்ட இடங்களை தேர்வு செய்திருந்தனர்.

இவற்றின் அடிப்படையிலேயே இறங்குதுறை பாலம் அமைப்பதற்கு கடலுக்குள் மணல் ஆய்வும் மேற்கொண்டனர்.

தற்போது அவை நிறைவுபெற்று தலைமன்னார் ராமேஸ்வரம் பயணிகள் கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ப புதிய இறங்குதுறை ஒன்றை அமைக்க 6.43 கோடி ரூபா இந்திய நாணயத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரை அருகே அமையவுள்ள T வடிவிலான புதிய இறங்குதுறை 119 மீட்டர் நீளமும், 7.5 மீட்டர் அகமும், 6 அடி உயரமும் உடையது எனவும் இதன் முதல் கட்ட பணியாக கடலுக்குள் இயந்திரங்களை நிறுத்த தேவையான நகர்வு மேடை அமைக்க மேடைக்கான பாகங்கள் பொருத்தும் பணி ஓலைக்குடா பகுதியில் முழுவீச்சில் நடந்து வருகிறது.

இம்மாத இறுதிக்குள் பாகங்கள் முழுமையாக பொருத்துபட்டு அனைத்தும் அக்னி தீர்த்த கடற்கரை புதிய கப்பல் இறங்குதுறை கட்டும் இடத்தில் இறக்கப்படும். அதை தொடர்ந்து கடலுக்குள் தூண்கள் அமைக்கும் பணியை தொடர்ந்து இறங்குதுறைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய இறங்குறைக்கான பணிகள் இயற்கையின் கால நிலைக்கு ஏற்றவாறு நடைபெறும் என்பதால் இந்த ஆண்டின் இறுதியிலேயே இவை நிறைவு பெற வாய்ப்புள்ளதாகவும் இந்தியப் பொறியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 5 ஆம் திகதி இலங்கை வரும்போது தலைமன்னார் இராமேஸ்வரம் பயணிகள் போக்கு வரத்து தொடர்பிலும் உரையாடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11,081 குடும்பங்களுக்கு காணிகள் இல்லை!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்குக் காணிகள் இல்லை என்றும், காணிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கடந்த 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 823 குடும்பங்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 796 குடும்பங்களும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 828 குடும்பங்களும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 342 குடும்பங்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 568 குடும்பங்களும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 730 குடும்பங்களும், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் 456 குடும்பங்களும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 855 குடும்பங்களும், உடுவில் பிரதே செயலர் பிரிவில் ஆயிரத்து 176 குடும்பங்களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 526 குடும்பங்களும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 256 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 589 குடும்பங்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இருந்து 109 குடும்பங்களும் என யாழ். மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்கு காணிகளை வழங் குமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இவற்றில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 38 குடும்பங்களுக்கும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 22 குடும்பங்களுக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 85 குடும்பங்களுக்கும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களுக்கும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 72 குடும்பங்களுக்கும் என மொத்தமாக 352 குடும்பங்களுக்கு இவ்வாறு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 729 குடும்பங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

# இவ்வார ராசிபலன்

*(20 பக்கத் தொடர்ச்சி)*

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவுகள் திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். தாய் வழி தகராறுகள் குறையும். குடும்ப கௌரவம் உயரும். காதல் கைகூடும். கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். விரக்திகள் மறையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். தேக ஆரோக்யம் மிளிரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். விரோதங்கள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமாரி சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P




**தனுசு:** கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும் வாரம். எடுத்த தொழில் முயற்சியில் வெற்றி உண்டாகும். உள்ளம் மகிழும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றி தரும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. கல்வியில் மேன்மைகள் உண்டாகும். துயரம் இல்லாத உயரங்களை சந்திப்பீர்கள். முன்னோர்கள் ஆசீர்வாதம் உண்டு. முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்தி தேடி வரும். பாராட்டுக்கள் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். வாகன மாற்றம் ஏற்படும். கடன்சுமை குறையும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வளமான சிந்தனை உதயமா-கும். அலைச்சல் ஆதாயம் தரும். தீமைகள் விலகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். பெண்களுக்கு பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொழில் வளர்ச்சி பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். அவமானங்கள் அகலும். உதவிகள் கிடைக்கும். வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Z




**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேர்வார்கள். பெற்றோர்கள் உதவி கிடைக்கும். விவேகம் வெற்றி தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்களால் ஏற்றம் பெருகும். உடல்பொலிவு கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். கல்வியில் கவனம் தேவை. பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். அதிர்‘ட வாய்ப்புக்கள் அலைமோதும். விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் தொடரும். வெளிவட்டாரத் தொடர்பு பெருகும். வேண்டாத நபர்கள் விலகுவர். வினைகள் அகலும். புதுமைகள் நிறைந்த காலம். நல்லச்செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகம் உண்டு. மன உற்சாகம் களை கட்டும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் கூடும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். பொருள் வரவு இருக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் சற்று கவனம் தேவை. நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஈசான்ய லிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** மாங்கல்ய பாக்கியம் அமையும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். காரிய வெற்றி கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப குழப்பங்கள் அகலும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும். பணவரவு திருப்தி தரும். குடும்ப குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். சகோதர ஒற்றுமை உண்டு. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய தொழில் அமையும். பெருமைகள் சேரும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். பயணம் அனுகூலம் தரும். மனம் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் வாயில் தேடி வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். ஆண்களின் அதிகாரம் உயரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். சுப விரயம் உண்டு. குடும்ப மேன்மைகள் உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வைகுண்ட நாதர், அதிர்ஷ்ட எண்: 9,7,5,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**மீனம்:** இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கும் வாரம். உண்மைகள் வெளிப்படும். உறவுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மன நிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். பணியில் பாராட்டுக் கிட்டும். சிக்கனத்தை கையாள வேண்டும். பொறுப்புக்கள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். அணிகலன்கள் சேர்க்கை ஏற்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். வரவுகள் திருப்தி தரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைககள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு ஆபரணம் சேரும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெருமைகள் கூடும். செல்வாக்கு உயரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். நல்லச் செய்திகள் நாடி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் பிடிப்பு ஏற்படும். முயற்சிகளில் வளர்ச்சியடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். தொழில் ரகசியம் காப்பது நல்லது. உறவினர்களிடம் சஞ்சலம் ஏற்பட்டு மறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 7,4,1,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R

# யாழ்ப்பாணத்தில் 35 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு, 124 மனுக்கள் ஏற்பு என்கிறார் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபன்

**- ந.லோகதயாளன்**


Election Commission
MEDIA RELEASE

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 7 உள்ளூராட்சி சபைக்காக சமர்ப்பிக்கப்பட்ட 159 வேட்பு மனுக்களில் 35 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரான ம.பிரதீபன் தெரிவித்தார்.

வேட்புமனுக்கள் ஏற்கும் பணிகள் நிறைவடைந்த பின்னர் வியாழக்கிழமை 20ம் திகதி தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற வேட்பு மனுத் தாக்கலிலேயே இந்த எண்ணிக்கைகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் ஓர் மாநகர சபை, 3 நகர சபைகள்,13 பிரதேச சபைகள் காணப்படுகின்றன. இதிலே மாநகர சபையில் 45 உறுப்பினர்களை தெரிவு செய்ய 12 மனுக்கள் தாக்கல் செய்தனர். இவற்றில் தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணியுடன் இரு சுயேச்சைக் குழுவுடன் ஐந்து வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

சாவகச்சேரி நகர சபையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் இரு சுயேட்சைக்குழு வேட்பு மனுவும், வலி.மேற்கு பிரதேச சபையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினதும், பருத்தித்துறை பிரதேச சபையில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று கட்சிகளின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டது.

வலி. தெற்கு பிரதேச சபையிலே தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய மூன்று கட்சிகளினதும், சாவகச்சேரி பிரதேச சபையிலே இரு சுயேட்சை குழுக்களின் வேட்பு மனுக்களும், காரைநகர் பிரதேச சபையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பு மனுவும், ஊர்காவற்றுறை பிரதேச சபையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டது.

இதேபோன்று நெடுந்தீவு பிரதேச சபையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேடபு மனுவும், வலி. கிழக்கு பிரதேச சபையிலே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டதோடு வடமராட்சி. தெற்கு மேற்கு பிரதேச சபையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றுடன் ஓர் சுயேச்சை வேடபு மனுவும், நல்லூர்ப் பிரதேச சபையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியவற்றுடன் ஓர் சுயேட்சை வேட்பு மனுவும் நிராக்கப்பட்டதோடு வல்வெட்டித்துறை நகர சபையிலே இரு சுயேச்சை குழுவின் வேட்பு மனு உள்படவே 35 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 136 கட்சிகளும் 23 சுயேட்சைக் குழுக்கழுமாக 159 வேட்பு மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் கட்சிகள் சார்பில் 22 கட்சிகளினதும் 13 சுயேட்சைக் குழுவினதும் வேட்பு மனுக்கலாக 35 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு எஞ்சிய 124 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

- COMMERCIAL
- RESIDENTIAL
- VACANT LAND
- INDUSTRIAL
- CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



**NESAN Subramaniam**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank
First National Financial LP
TD Canada Trust
Manulife
National Bank
Desjardins
RFA
MCAP
Home Trust
Equitable Bank
radius financial
RMG mortgages

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Trinity Thaiyal
Tailoring and Alteration Services
Mary James: (647) 467-1410
Located: Neilson and Sheppard
நாம் வழங்கும் தையல் சேவைகள்:
சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை,
ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள் வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக் கூடிய வகையில் Pleating செய்தல்
Instagram: @trinitythaiyal

உதயம் 1511 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 21, 2025

# ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் திருக்குறள் நூல் மீது உறுதிமொழியேற்று உறுப்பினராகப் பதவியேற்ற தமிழ் அரசியல் பிரமுகர் லோகன் கணபதி



தனது அரசியல் பயணத்தை மார்க்கம் நகரசபை அங்கத்தவராக 2012ம் ஆண்டு வெற்றிகரமாக ஆரம்பித்த தற்போதைய ஒன்றாரியோ மாகாண சபையின் மார்க்கம்- தோர்ண்ஹில் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் மார்க்கம் நகர சபையில் எவ்வாறு 3 காலப்பகுதிகளின் 7ம் வட்டார அங்கத்தவராகப் பணியாற்றினாரோ, அதே போன்று தற்போது ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்திலும் தனது 3வது காலப் பகுதியை அதுவும் ஆளும் கட்சி உறுப்பினராக ஆரம்பிக்கும் வகையில் 20 -03.2025 வியாழக்கிழமையன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு தனது அரசியல் பயணத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளார்.
(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் மீண்டும் திருக்குறள் மீது உறுதிமொழியேற்று அமைச்சராகப் பதவியேற்ற் தமிழ் அரசியல் பிரமுகர் விஜய் தணிகாசலம்



19.03.2025 புதன்கிழமையன்று ஒன்றாறியோ மாநில முதல்வர் டக் ஃபோர்ட் அவர்களால் விஜய் தணிகாசலம் அவர்கள் சுகாதார அமைச்சின் உளநலத்துறையின் இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். விஜய் தணிகாசலம் அவர்கள் மூன்று தடவைகள் தொடர்ச்சியாக ஒன்றாறியோ மாநிலத்தின் ஸ்காபரோ - றூஜ் பார்க் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் மூன்று காலப் பகுதியிலும் இணை அமைச்சராகவும் பதவி வகிக்கும் மக்கள் ஆதரவை அவர் பெற்றுள்ளார். இந்தத் தடவையும் திருவள்ளுவர் இயற்றிய உலகப் பொது-மறையாம் "திருக்குறள்" மீது பதவியேற்பு உறுதிமொழி எடுத்து தனது பதவிகளை ஏற்றிருந்தார்.
(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## King Charles III Coronation Medal Presentation Ceremony, hosted by Hon. Mary Ng, Member of Parliament for Markham Thornhill.

# Markham Thornhill எம்பி மேரி இங் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இங்கிலாந்தின் 3வது மன்னர் சார்ள்ஸ் முடிசூட்டுப் பதக்கம் வழங்கும் வைபவம்






**Markham Thornhill** தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மேரி இங் அவர்களது ஏற்பாட்டில் இங்கிலாந்து தேசத்தின் 3வது மன்னர் சார்ள்ஸ் அவர்களின் முடிசூட்டு விழாவைக் குறித்த பதக்கம் வழங்கும் வைபவம் 19-03-2025 புதன்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது.
மார்க்கம் நகரில் அமைந்துள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்ற இந்த அரச வைபவத்தில் முக்கிய உரையை பாராளுமன்ற உறுப்பினர் மேரி இங் அவர்கள் ஆற்றினார்கள்.
அதில் இவ்வாறான சிறப்புப் பதக்கங்கள் வழங்கப்பெடுவதன் நோக்கம் மற்றும் யார் யாரெல்லாம் இந்தப் பதக்கத்தை பெறுவதற்கு தகுதி பெற்றவர்கள் போன்ற விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு முடிசூட்டுப் பதக்கங்கள் பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்பெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

# ''புதிய குரல்'' பத்திரிகை நடத்திய ''Targeting Muslims in Sri Lanka என்னும் நூல் வெளியீடு மற்றும் ஊடக விருதுகள் வழங்கல் விழா

## தமிழ், சிங்கள. இஸ்லாமிய மக்களுக்கு எதிரான மறைமுகமான தாக்குதல்களையும் படுகொலைகளும் நடத்திய ரணில். மகிந்த ராஜபக்ச, கோட்டாபாய ராஜபக்ச மற்றும் பிரேமசாத ஆகியோரின் கொலை வெறியை அம்பலப்படுத்திய ஒரு காத்திரமான அரசியல் கருத்தரங்கு

16-03-2025 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று மாலை கனடா- ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள" "வரவேற்பு மண்டபத்தில் கனடாவின் "புதிய குரல்" இணைய பத்திரிகை நிறுவனம் நடத்திய **'Targeting Muslims in Sri Lanka'** என்னும் நூல் வெளியீடு மற்றும் ஊடக விருதுகள் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.
மேற்படி நிகழ்விற்கு பத்திரிகையின் ஆசிரியரும் **'Targeting Muslims in Sri Lanka'** என்னும் நூலை எழுதியவருமான கலாநிதி ஏ. எம். எம். பகாத் தலைமைதாங்கினார்.





மேற்படி விழாவில் கனடா "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உபு தலைவர்களில் ஒருவருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் மற்றும்" யுகம்" வானொலி நிலையத்தின் அதிபர் கணபதி ரவீந்திரன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பெற்றன.
(தொடர்ச்சி 14ம் பக்கம்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker